# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி8 செவ்வாய்க்கிழமை (24-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:240


### சர்வஜன வாக்கெடுப்புக் குறித்து

# தமிழ்க் கட்சிகளுடனும் பேசுவதற்கு அரசு முடிவு

## ஆதரவைத் திரட்டும் முயற்சியாக

கொழும்பு,ஜூலை24

**அரசமைப்பைத் திருத்துவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அறிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக் கணிப்புக் குறித்தும் உத்தேச அரசமைப்புத் திருத்தம் குறித்தும் தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி குமாரதுங்கவின் அரசு முடிவு செய்திருக்கின்றது.**

அரசமைப்பை மாற்றும் சர்வஜன வாக்கெடுப்பை தமிழ்க்கட்சிகள் எதிர்க்க முடிவு செய்துள்ள நிலையில் -

அவர்களின் ஆதரவைப் பெறும் நோக்கத்துடன் அந்தக் கட்சிகளுடன் கலந்துரையாடல்களை நடத்த அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள அரச தரப்புக் குழுவை முதலில் தமிழ்க் கட்சிகளுடன் பேசும்படி ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்பின் நோக்கத்தை தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளுக்கு விளக்கி அவர்களின் ஆதரவைப் பெறும் முயற்சியில் இந்தக் குழு ஈடுபடும் என்றும் -

தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் விடயங்களை அரசமைப்பில் சேர்ப்பது குறித்து இந்தக் குழு தொடர் கலந்துரையாடல்களை தமிழ்க் கட்சிகளுடன் நடத்தும் என்றும் - அரசுப் பிரதிநிதி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

### பிந்திய செய்தி

# கட்டுநாயக்காவில் பெரும் தாக்குதல்!

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீது இன்று அதிகாலை 4மணியளவில் விடுதலைப் புலிகள் மிகப் பெரும் தாக்குதல் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றனர். விமானப்படையின் சில விமானங்கள் தகர்க்கப்பட்டிருப்பதாகவும் இன்று அதிகாலை இச்செய்தி எழுதப்படும்போது பெரும் சண்டை தொடர்ந்து கொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவித்தன.

ஆறு குண்டுவீச்சு விமானங்களும் ஒரு ஹெலிக்கொப்டரும் அழிக்கப்பட்டிருப்பதாக சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

பல முனைகளில் - பெருஞ்சமர் தொடர்வதால் பெரும் எண்ணிக்கையான புலிகள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

இந்தச் சமரை அடுத்து அருகில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் இன்று அதிகாலை 4 மணி முதல் மூடப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணரத்ன அதிகாலை 4.30 மணியளவில் உதயனுக்குத் தெரிவித்தார். பயணிகளை விமான நிலையத்துக்கு வர வேண்டாம் என்று கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

# யாழ். பல்கலை மாணவரிடம் 4 உறுதிமொழிகளை எழுத்து மூலம் கோருகிறது மானிய ஆணைக்குழு!

## அதன் பிரதியை டக்ளஸிடம் வழங்கும்படியும் பணிப்புரை

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திறக்கப்படுவது தொடர்பாக பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளிடம் நான்கு உறுதி மொழிகளை எழுத்து மூலம் பெற்று அனுப்பும்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளைக்கு 'பக்ஸ்' மூலம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தது.

அந்தக் கடிதம் தொடர்பான பதிலை நேற்று மதியம் 12மணிக்குள் தனக்குத் தெரிவிக்கும்படி, மாணவர் ஒன்றியத் தலைவரை துணைவேந்தர் கோரியிருந்தார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் உறுதிமொழிகள் கோரி அனுப்பப்பட்டிருந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:-

*யாழ்.பல்கலைக்கழகத்தை மீண்டும் திறப்பது தொடர்பாக பின்வரும் உறுதிமொழிக் கடிதங்களை மாணவர்களிடம் பெற்று அனுப்பும்படியும், அவற்றின் நகல்களை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரம், இந்து சமய கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும், யாழ்.நகர 51ஆவது படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தரவுக்கும் அனுப்பி வைக்கவும்.*

*1) மாணவர்களாகிய நாங்கள் 2001ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி வளாகம் திறக்கப்படுவதில் இருந்து எந்த வகையிலும் ஒத்துழையாமை நடவடிக்கைகளில் (Insubordination) ஈடுபடமாட்டோம் என்று உறுதியளிக்கின்றோம்.*

*2) மாணவர்களாகிய நாங்கள் பல்கலைக்கழக வளவினுள் அச்சுறுத்தல் நடவடிக்கைகள் மற்றும் காடைத்தனம் ஆகியவற்றில் ஈடுபடமாட்டோம் என்று உறுதியளிக்கிறோம்.*

*3) மாணவர்களாகிய நாங்கள் எந்தவித மறைமுகச் செயற்பாடுகளிலும் யாழ்ப்பாணத்திலுள்ள பல்கலைக்கழம், பாடசாலைகள் மற்றும் பிற நிறுவனங்கள் ஆகியவற்றின் சமூகமான செயற்பாடுகளை சீர்குலைப்பது தொடர்பான செயற்பாடுகளிலும் எங்களை ஈடுபடுத்தமாட்டோம் என்றும் உறுதியளிக்கின்றோம்.*

*4) மாணவர்களாகிய நாங்கள் யாழ்.பல்கலைக்கழகச் சூழலில் மேற்கூறிய எந்தவொரு நடவடிக்கையிலும் தொடர்பு கொண்டதற்கான ஆதாரங்கள் இருக்கும் பட்சத்தில், யாழ். பல்கலைக்கழகத்தை உடனடியாக சம்பந்தப்பட்ட நிர்வாகம் மூடுவதற்கு ஒப்புக்கொள்கின்றோம்.*

*மாணவர் பிரதிநிதிகளால் கையெழுத்திடப்படும் இந்த உறுதிமொழிக் கடிதங்கள் துணைவேந்தரால் மேற்கூறப்பட்ட அமைச்சர், கட்டளை அதிகாரி, உயர் கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பப்பட வேண்டும்.*

- இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-ஒ)

## நிபந்தனைகளை ஏற்று உறுதி வழங்க யாழ். பல்கலை மாணவர்கள் மறுப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ். பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளிடம் நான்கு உறுதிமொழிகளை வழங்குமாறு கோரி, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் பி.ஆர்.ஆர்.என்.மெண்டிஸினால் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஊடாக நேற்று அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாக -

அந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவிதது மானிய ஆணைக்குழுவின் தலைவருககு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று பதில் அனுப்பி வைத்தது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஊடாக மாணவர் பிரதிநிதிகள் நேற்று அனுப்பி வைத்த பதிலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தங்களின் 23-07-2001 திகதிய (நேற்றைய) கடிதத்தில் தாங்கள் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் முற்றிலும் நியாயமற்ற - ஜனநாயகச் சுதந்திரத்துக்கு மாறான - விடயங்களாகும். யாழ்.பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் இதுவரை நியாயமான கோரிக்கைகளுக்காக ஜனநாயக ரீதியிலான, செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தோம். அதே நேரம் எந்தவிதமான வன்முறைகளிலும் நாம் ஈடுபடவில்லை; வன்முறைகளில் ஈடுபடும்படி எவரையும் தூண்டவுமில்லை. அதேபோல பல்கலைக்கழகச் சொத்துகளுக்கோ, பொதுச் சொத்துகளுக்கோ எவ்வித சேதத்தினையும் ஏற்படுத்தவுமில்லை.

ஆனால் மாணவர்களின் அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் என்பன மீறப்படும்போதும் அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிரான மனித உரிமைகள் மீறப்படுவதற்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்களின் பதில் ஏற்கப்பட முடியாதது!

### ஈ.பி.டி.பி. கூறுகின்றது

யாழ்ப்பாணம்,ஜூலை24

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பதிலில் கூறப்பட்டிருக்கும் விடயங்கள் முற்றிலும் ஏற்கப்பட முடியாதவை என்று ஈ.பி.டி.பி. தெரிவித்திருக்கின்றது.

"யாழ்.பல்கலைக்கழகச் செயற்பாடுகள் தொடர உயர் கல்வி அமைச்சருக்குச் சிபாரிசு" என்ற தலைப்பில் ஈ.பி.டி.பி. விடுத்த செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் செய்திக்குறிப்பில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளிடம் நான்கு உறுதிமொழிகளை வழங்கும்படி கோரி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவரால் வழங்கப்பட்ட கடிதம் அப்படியே பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கேட்டுக்கொண்ட உத்தரவாதங்களை உள்ளடக்கியதாக மாணவர் ஒன்றியத்தின் பதில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பகிஷ்கரிப்பைத் தற்காலிகமாக கைவிடுவதற்கு மாணவர்கள் முடிவு

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ். பல்கலைக்கழக மாணவன் கி.திவ்வியனை விடுவிக்கக் கோரி நடத்தி வந்த பகிஷ்கரிப்புப் போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி நேற்று முதல் விரிவுரைகளுக்கு சமுகமளிப்பது என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

மாணவர் ஒன்றியத்தின் கூட்டம் நேற்றுக்காலை கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பல்கலைக்கழக பகிஷ்கரிப்புக் குறித்தும் -

பல்கலைக்கழக மானிய ஆணைக குழுவின் தலைவரால் அனுப்பட்டுள்ள நான்கு உறுதிமொழிகளைக் கோரும் - கடிதம் குறித்தும் - விரிவாக ஆராயப்பட்டது.

அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 2ஆம் திகதி எமது மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளர் கி.திவ்வியன் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரை விடுதலை செய்யக்கோரி பகிஷ்கரிப்புப் போராட்டத்தை ஆரம்பித்தோம். அதன் விளைவாக திவ்வியன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# மூடை விழுந்து தொழிலாளி பாதிப்பு

வடமராட்சி,ஜுலை24

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி மீது 70 கிலோ எடைகொண்ட மூடை விழுந்து இடதுகாலில் பலத்த உட்காயங்களுக்குள்ளானார்.

நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் தொண்டமானாற்றைச் சேர்ந்த எஸ். செல்வராசா (36 வயது) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

இவர் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-173)

## மிதிவெடியில் சிக்கி கால் இழந்தார்

யாழ்ப்பாணம்,ஜுலை24

அரியாலைப் பகுதிக்கு வீடு பார்க்கச் சென்றவர்களில் ஒருவர் மிதிவெடியில் சிக்குண்டு இடது கால் முழங்காலுக்குக் கீழ் இழந்து படுகாயமடைந்தார்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் அரியாலையில் இருந்து இடம்பெயர்ந்து உரும்பிராயில் வசிப்பவரான காத்தி பரஞ்சோதி (வயது 52) என்பவரே படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (15-173)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜுலை24

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வட்டுக்கோட்டை (சங்கானை) கிளையின் விசேட கூட்டம் எதிர் வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சித்தங்கேணி கணேச வித்தியாலயத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் தாய்ச் சங்கம் மற்றும் மாவட்டப் பிரதிநிதிகள் கலந்து கொள்வர். இக்கூட்டம் இன்று நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (உ-3)

## தவறவிட்ட கைச்சங்கிலி

யாழ்ப்பாணம்,ஜுலை24

மானிப்பாய்ச் சந்தி காவலரணுக்கு அருகே தவறவிடப்பட்டிருந்த தங்கக் கைச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டு யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

தவறவிட்டோர் அங்கு வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு திருமறைக் கலாமன்ற பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## வீடு திருத்த கொடுப்பனவு

தென்மராட்சி,ஜுலை24

வடமராட்சி கிழக்கு, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 95 குடும்பங்களுக்கு வீடு திருத்துவதற்கான கொடுப்பனவாக, ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் நாளை புதன்கிழமை வழங்கப்படவிருக்கின்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள 'ஹான்' அலுவலகத்தில் வைத்து இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.சிறீரங்கேஸ்வரன் தெரிவித்தார். (3)

## பிரசவ விடுதி புனரமைப்பு

வடமராட்சி,ஜுலை24

மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையிலுள்ள பிரசவ விடுதி (வாட்) பிரெஞ்சு வைத்தியக் குழுவால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே சிறுவர்களுக்கான விடுதி இக்குழுவினரால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. (க-173)

## விதை நெல் விநியோகம்

வலி.மேற்கு,ஜுலை22

தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் இன்று செவ்வாய்க்கிழமை விதை நெல் விநியோகிக்கப்படவுள்ளது.

கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட விதை நெல் வலிகாமம் மேற்கு பிரதேச விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (ம-117)

## இன்று நாய்கள் அழிப்பு

வலி.மேற்கு,ஜுலை24

வட்டுக்கோட்டைப் பகுதியில் கட்டாக்காலியாக அலைந்து திரியும் நாய்களை நஞ்சூட்டி அழிக்கும் பணி இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டைப் பகுதி சுகாதாரப் பரிசோதகர் நாய்களுக்கு நஞ்சூட்டி அழிக்கும் பணியை மேற்கொள்ளவுள்ளார்.

ஆதலால் அன்றையதினம் வளர்ப்பு நாய்களை கட்டி வைக்குமாறு சுகாதாரப் பரிசோதகர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-117)

## நல்லூர் அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜுலை24

நல்லூர் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

பாடசாலைத் தொகை மதிப்புப் படிவம் பூரணப்படுத்தல் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றன. (ஐ-3)

## கண்காட்சி தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜுலை24

வவுனியாவில் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள மாகாண மட்டக் கைத்தொழில் கண்காட்சி தொடர்பான தொழில் திணைக்களப் போதனாசிரியர்களுக்கு விளக்கம் அளிக்கும் கலந்துரையாடல் நாளை புதன்கிழமை யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (ஐ-3)

# சரவணை சின்னமடுமாதா தேவாலய சிறப்பு நிகழ்வு

குருநகர்,ஜுலை24

சரவணை சின்னமடுமாதா தேவாலயம் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ் மறைமாவட்டக்குரு முதல்வர் அருட்திரு ஏ.பி செல்வராஜா அடிகளாரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

அடுத்த மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்த ஆலயத்தில் திருவிழாத் திருப்பலியை யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் அவர்கள் நிறைவேற்றி வைப்பார்கள்.

இவ்விரு வைபவங்களிலும் பக்தர்கள் பங்குபற்ற வசதியாக போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ் பேராலயம் தெரிவித்தது. (ஐ-51)

## மருதங்கேணி கலாசாரப் பேரவைக்கு நிதி ஒதுக்கீடு

வடமராட்சி கிழக்கு,ஜுலை24

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கலை, கலாசார பேரவைக்கு வடக்கு - கிழக்கு புனரமைப்பு, அபிவிருத்திச் சபையின் நிதியிலிருந்து 5 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கலை, கலாசார பேரவைக்கான இசைக்கருவிகள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நிதியை ஒதுக்கித்தருமாறு பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரனிடம் கலை, கலாசார பேரவை வேண்டுகோள் விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.(க-182)

## மிருசுவில் வரை பஸ்சேவை நீடிப்பு

தென்மராட்சி,ஜுலை24

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்தும் பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்தும் கொடிகாமம் வரை நடத்தப்பட்ட பஸ் சேவைகள் நேற்று முன்தினம் தொடக்கம் மிருசுவில் தேவாலயம் வரை நீடிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து பஸ் சேவை மிருசுவில் வரை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## விடத்தற்பளை மாணவருக்கு

விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் கல்வி கற்று தற்போது வேறு பாடசாலைகளில் கற்கும் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களும் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கரவெட்டி ஞானசாரியார் கல்லூரிக்கு வருகைதந்து விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிடுமாறு அதிபர் கு.கதிர்காமசேகரர் அறிவித்துள்ளார். (ஐ-117)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 30 - 09 - 1937

உதிர்வு 15 - 08 - 1999

அமரர்

## முருகர் அழகரத்தினம்

(ஓய்வு பெற்ற நில அளவைப்பட வரைஞர்)

திதி:24-07-2001

எங்கள் இல்லக் கோயிலின் அன்புச் சுடரே!
ஈராண்டு மறைந்திடினும் உங்கள் நினைவு
என்றும் எம் இதயங்களில் நிழலாடும்
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

*82, மானிப்பாய் வீதி,*
*ஆனைக்கோட்டை.* (90234)

மனைவி,
பிள்ளைகள்.

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 13 - 04 - 1926

உதிர்வு 04 - 08 - 2000

## திருமதி இராமலிங்கம் இராசம்மா

*திதி: 24.07.2001*

ஆண்டு ஒன்று சென்றதம்மா
ஆறவில்லை உன் துயரம்
உன் பிரிவால் தவிக்கின்றோம்
என்ன செய்வோம் பராபரனே!

இ.கருணாகரன்,
*(மகன் - இ.மி.ச)*
*கப்பூது, கரவெட்டி.* (90383)

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மற்றும் உறவினர்கள்.

# தவறிவிட்டது

இணுவில் கே. கே. எஸ். வீதியைச் சேர்ந்த பஞ்சாட்சரம் ஸ்ரீவரதன் ஆகிய எனது வாகன அனுமதிப்பத்திரம் (கம்பியூட்டர் பதிப்பு) யாழ். நகரப் பகுதியில் அண்மையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் அம்பிகாபதி பான்ஸி ஹவுஸ், பெரிய கடைஎனும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும்.

(C/17539) ப.ஸ்ரீவரதன்.

**நாகம்ஸ் சுன்னாகம்**

சரத்குமார், மீனா,
சுவலட்சுமி, வடிவேல்
நடிக்க
இனிய பாடல்கள் நிறைந்த

**மாரி** (ரீல்ஸ்)

காட்சிகள்:- 11.00, 2.30
(90256) (புதிய நேரம்)

**ராஜா யாழ்ப்பாணம்**

விஜயகாந்த், சாக்ஷி,
பிரகாஷ்ராஜ்,
ரம்யாகிருஷ்ணன், நாசர்
*மற்றும் பலர் நடிப்பில*

**வாஞ்சிநாதன்**

(C/17443)

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)

# முக்கிய அறிவித்தல்

வட - கிழக்கு மாகாண எழுதுநர் நியமனத்தில் பாதிக்கப்பட்ட அனைவரும் வியாழக்கிழமை (26-07-2001) அன்று யாழ்ப்பாணம் D.M.I கல்வி நிலையத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

*திகதி:- 26-07-2001*
*நேரம்:- 12.00 a.m* (90389)

S.வசந்தகுமார்
தலைவர்

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள்,
முகாமையாளர்கள், கிளைமுகாமையாளர்கள்,
உதவியாளர்கள் அனைவருக்கும்

# லாலா சோப் ஸ்தாபனத்தாரின் அன்பான வேண்டுகோள்

யாழ்.குடாநாட்டில் சிறுகைத்தொழிலாக உற்பத்தி செய்யப்படும் லாலா சோப், சன்சயின் சோப் என்பவற்றைத் தங்கள் சங்கங்கள் ஊடாக கூடுதலாக விற்பனைசெய்து எமது சிறு கைத்தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவீர்களானால் எமது யாழ்.குடாநாட்டிற்குத் தேவையான சோப்பை உற்பத்தி செய்து எமது வளத்தைப் பெருக்கி இங்கு வறுமைக் கோட்டிற்குள் வாழும் அநேகமான இளம் சந்ததியினருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க முடியும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

லாலா சோப் ஸ்தாபனத்தார்,
(C/17540) அச்சுவேலி.

# மரண அறிவித்தல்

## தெட்சணாமூர்த்தி சண்முகராஜா

(ஓய்வூதியர் - இலங்கை மத்திய வங்கி)

தம்பியோடை, வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த தெட்சணாமூர்த்தி சண்முகராஜா (ஓய்வூதியர் - இலங்கை மத்திய வங்கி) நேற்று (23.07.2001) திங்கட்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் திருமதி பொன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இரட்ணசபாபதி, காலஞ்சென்ற பொன்னம்பலம், காலஞ்சென்ற திருமதி மணி இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற நவரத்தினம், மகேஸ்வரி, புவனேஸ்வரி, துரைராஜா (இந்தியா), திருச்செல்வம் (ஓய்வுபெற்ற தபாலதிபர் - கொழும்பு), நடேஸ்வரி பொன்னம்பலம் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் திருமதி உமா சிவகுமாரன், திருமதி நடேஸ்வரி இந்திரலிங்கம் ஆகியோரின் பெரிய தந்தையும் ச.சிவகுமாரன் (இலங்கை வங்கி, நெல்லியடி), க.இந்திரலிங்கம் (அரச அச்சகம், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் அருண்சங்கர், சிந்தியா, சரண்யா, சுகன்யா, நிதர்சன், நிஷாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2001) செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தம்பியோடை,*
*வதிரி,*
*கரவெட்டி.* (C/17541)

தகவல்:
ச.சிவகுமாரன்
(மருமகன் -

## லட்சக்கணக்கான மக்கள் கதறியழ

# சிவாஜியின் உடல் தீயுடன் சங்கமம்

## முழு அரச மரியாதைகளுடன் இறுதிச்சடங்கு

சென்னை,ஜுலை24

தமிழ்த் திரையுலகின் முடிசூடா மன்னன் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் உடல் நேற்று பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் கதறியள முழு அரச மரியாதைகளுடன் தகனம் செய்யப்பட்டது.



நேற்றுக் காலை இடம்பெற்ற நடிகர் திலகத்தின் இறுதி ஊர்வலத்தில் லட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு அவருக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

சென்னை தியாகராஜ நகர் செவாலியே சிவாஜி வீதியில் உள்ள சிவாஜியின் 'அன்னை இல்லம்' வீட்டில் இருந்து நேற்றுக் காலை 9 மணிக்கு சிவாஜியின் இறுதி ஊர்வலம் ஆரம்பமானது.

பூக்களால் அலங்கரிக்கப்பட்ட வண்டியில் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த அவரது பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. திரையுலகப் பிரமுகர்கள், அரசியல் தலைவர்கள், ரசிகர்கள் என்று லட்சக்கணக்கானோர் அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

தியாகராஜ நகரில் ஆரம்பமான இறுதி ஊர்வலம் பெசன்ட் நகரில் உள்ள மின்சாரத் தகன மையத்தை வந்தடைய சுமார் 2மணிநேரம் எடுத்தது.

தகன மையத்தில் அவரது உடல் தகனமூட்டப்படுவதற்கு சற்று முன்பாக சென்னை நகர மேயரும் கருணாநிதியின் மகனுமான மு.க. ஸ்ராலின் மலர்வளையம் வைத்து தனது இறுதி மரியாதையைச் செலுத்தினார்.

பகல் 12மணியளவில் பொலீஸார் மரியாதை வேட்டுக்களைத் தீர்க்க, லட்சக்கணக்கான ரசிகர்கள் கதறியழ சிவாஜியின் உடல் தகனம் செய்யப்பட்டது.

இத்துடன் தமிழ்த்திரையுலகின் ஒரு சகாப்தம் ஓய்ந்துவிட்டது என்று விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்தனர். (ம)



ஐம்பது ஆண்டு கால கலையுலக நண்பர் பிரிந்த துயர் தாங்காது கலைஞர் கருணாநிதி கலங்குவதையும் சிம்மக்குரலால் மனம் கவர்ந்த நடிகர் திலகத்தின் பிரிவால் வை.கோபாலசாமி கண்ணீர் விடுவதையும் படங்களில் காணலாம்.



தமிழ்த் திரையுலக வேந்தனின் மறைவால் வேதனையடைந்துள்ள நடிகைகள் குஷ்பு, ராதிகா ஆகியோரையும் சரித்திரம் படைத்த திரைப்படங்களான பாசமலர், பார்த்தால் பசி தீரும், போன்ற படங்களில் சிவாஜியுடன் நடித்த 'காதல் மன்னன்' ஜெமினி கணேசன் சிவாஜியின் உடலைப் பார்த்து கதறி அழுவதையும் படங்களில் காணலாம்.

# அதிகாரத்தை மீறிச் செயற்பட்ட வாஹிட் அதிபர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார்

ஜகார்த்தா,ஜுலை24

இந்தோனேசியாவில் அப்துல் ரஹ்மான் வாஹிட் அதிபர் பதவியிலிருந்து விலக்கப்பட்டதாக நாடாளுமன்றம் நேற்று அறிவித்தது.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் கலைத்து விடுவதாக அதிபர் வாஹிட் அறிவித்தமை அவர் தனது அதிகாரத்துக்கு அப்பாற்பட்டுச் செயற்பட்டதைக் காட்டுகின்றது என்று நாட்டின் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னதாக அதிபர் வாஹிட் மீதான ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பான குற்றப் பிரேரணையை நாட்டின் அதியுயர் அமைப்பான நாடாளுமன்ற மக்கள் ஆலோசனைச் சபை விசாரிக்க ஆரம்பித்தது. இது தொடர்பாக இன்று சபையின் முன் ஆஜராகுமாறு அதிபர் வாஹிட்டுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த இக்கட்டு நிலையில் இருந்து தப்பிப்பதற்காக நாட்டில் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்த அதிபர் வாஹிட் நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் கலைப்பதாகவும் அறிவித்தார்.

விரைவில் பொதுத் தேர்தல் ஒன்றை

உலக அரங்கில்

நடத்தப்போவதாகவும் அறிவித்த அவர், நாட்டின் இரண்டாவது பெரிய கட்சியான கோல்கர் கட்சியின் நடவடிக்கைகளையும் இடைநிறுத்தி வைத்தார்.

இவரது இந்தச் செயலைக் கண்டித்து அமைச்சரவைச் செயலாளர் தனது பதவியை இராஜினமாச் செய்தார். பாதுகாப்பு அமைச்சரும் தனது பதவியை இராஜினாமாச் செய்யப் போவதாக அறிவித்தார்.

இந்த நிலையில் -

அதிபர் தனது அதிகாரத்துக்கு அப்பாற்பட்டுச் செயற்படுகின்றார் என்று இந்தோனேசிய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற கீழ் அவை அதிபரின் ஆணையை நிராகரிப்பதற்கு ஆதரவாக வாக்களித்தது.

இதனால் அதிபர் உடனடியாகத் தனது பதவியில் இருந்து விலகிச் செல்ல வேண்டிய இக்கட்டு நிலை ஏற்பட்டது.

ஆனால் வாஹிட் பதவி விலக மறுத்ததை அடுத்து அவரை பதவியிலிருந்து விலக்குவதா இந்தோனேசிய நாடாளுமன்றம் நேற்று அறிவித்தது. தன்னைப் பதவி விலக்கினாலும் அதிபர் மாளிகையிலிருந்து வெளியேறப்போவதில்லை என வாஹிட் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-9)

# ஆக்ரா மாநாட்டு தோல்விக்கு அதிபர் முஷாரப்பே காரணம்

## வாஜ்பாய் பகிரங்கமாகத் தெரிவிப்பு



சென்னை,ஜுலை24

காஷ்மீர் பிரச்சினையைத் தீர்த்தாலேயே மற்றைய பிரச்சினை குறித்து ஆராய முடியும் என்று ஜெனரல் முஷாரப் வற்புறுத்தியமையும்-

எல்லை தாண்டிய பயங்கரவாதம் குறித்தும் அவர் பேசமறுத்தமையுமே -

ஆக்ரா உச்சி மாநாடு தோல்வி அடைந்ததற்குக் காரணம் என்று இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

மாநாடு முடிவடைந்த பின்னர் அது குறித்து அவர் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவிப்பது இதுவே முதற்றடவை ஆகும்.

மாநாடு குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாகிஸ்தான் கூறியது போன்று எந்த ஒரு ஒற்றை உடன்பாட்டு வாசகத்துக்கும் இரு நாடுகளும் இணங்கவில்லை.

காஷ்மீர் பற்றிய விடயம் தவிர வேறு எந்த விடயம் குறித்துப் பேசுவதற்கும் பாகிஸ்தான் தயாரில்லை என்பது இப்போது தெரியவந்துள்ளது. இந்தியாவில் இருந்து காஷ்மீர் பிரிக்கப்பட முடியாது. இந்தப் பிரச்சினையில் விட்டுக்கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை.

காஷ்மீர் பற்றிய தமது கருத்தை வெளி உலகுக்குத் தெரியப்படுத்துவதற்காக ஆக்ரா மாநாட்டை ஜெனரல் முஷாரப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் போன்று தெரிகிறது.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை காஷ்மீர் சுதந்திர போராட்டம் என்று வர்ணித்த முஷாரப் பேச்சு பற்றிய பிரகடனத்தின் வரைவு நகலில் எல்லை தாண்டிய பயங்கரவாதம் பற்றிக் குறிப்பிடவேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கையை அடியோடு நிராகரித்தார் - என்று தெரிவித்தார். (ம-9)

# ஜம்மு காஷ்மீரில் 15 இந்துக்கள் தீவிரவாதிகளால் சுட்டுக்கொலை

புதுடில்லி,ஜுலை24

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள தோடா மாவட்டத்தில் 15 இந்துக்களை முஸ்லிம் தீவிரவாதிகள் சுட்டுக்கொன்று விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளில் இருந்த இவர்களை வயல்வெளிக்கு இழுத்துச் சென்ற ஆயுதபாணிகள் அங்கு வைத்து அவர்களை சுட்டுக் கொன்றனர்.

ஜம்மு காஷ்மீரில் கடந்த சில நாள்களில் தொடர்ச்சியாக இடம்பெற்ற இரண்டாவது தீவிரவாதத் தாக்குதல் இதுவாகும். கடந்த சனிக்கிழமையன்று மாநிலத்தில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் முஸ்லிம் தீவிரவாதிகளால் 5 இந்துக்கள் கடத்தப்பட்டுள்ளனர். இவர்களுள் நால்வர் கிராம பாதுகாப்புக் குழுவைச் சேர்ந்தவர்கள்.

இந்த இரு சம்பவங்களையும் கண்டித்து ஜம்மு காஷ்மீரில் நேற்ற முழுமையான கடையடைப்பு நடத்தப்பட்டது. (ம-9)

# ஸ்லோவாக்கியா நாட்டில் யோகாசனம் கட்டாய பாடம்

மத்திய ஐரோப்பிய நாடான ஸ்லோவாக்கியாவில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் ஆரம்பப் பாடசாலைகளில் யோகாசனம் ஒரு கட்டாய பாடமாகச் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளது.

அந்த நாட்டின் கல்வி அமைச்சர் இதற்கான பணிப்பை வழங்கி உள்ளார்.

"யோகாசனம் செய்வதால் உடல் நன்றாக இருக்கும். உடல் நலக்குறைவு ஏற்படாது. ஆஸ்துமா, மூச்சிறைப்பு, முதுகுவலி போன்ற நோயால் அவதிப்படுபவர்களுக்கும் யோகாசனம் மிகப் பயனுள்ளது" என்று கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆனால் கல்வி அமைச்சரின் இந்தத் திட்டத்துக்கு கிறிஸ்தவ அமைப்புகளிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பி உள்ளது.

யோகாசனம் கற்கும் மாணவர்கள் ஆன்மீக ரீதியில் இந்து மதத்துக்கு இடம் கொடுத்து விடுவார்கள். எனவே அதனை கட்டாய பாடமாக்க வேண்டாம் என்று கிறிஸ்தவ மதத் தலைவர்கள் கல்வி அமைச்சரிடம் கோரி உள்ளனர்.

யோகாசனம் ஒரு நல்ல தேகப் பயிற்சி என்று கூறி உள்ள கல்வி அமைச்சர் கிறிஸ்தவ மதத் தலைவர்கள் இந்தத் திட்டத்தை அடியோடு நிராகரிக்காது மாணவர்கள் அதனை விருப்பப் பாடமாகக் கற்பதற்காவது அனுமதிக்க வேண்டும் என்றும் கூறி உள்ளார். (ம)

# சீனாவில் சிவில் அதிகாரிகள் ஆங்கிலம் கற்பதில் தீவிரம்

பெய்ஜிங்,ஜுலை24

ஒலிம்பிக் சீனாவில் நடைபெற உள்ளதையொட்டி அங்கு கடமையாற்றும் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிவில் சேவையாளர்களும் ஆங்கிலம் கற்கும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஒலிம்பிக் போட்டிகளைக் காண லட்சக்கணக்கான வெளிநாட்டவர்கள் சீனாவுக்கு வருகை தருவர் என்று எதிர்பார்க்கப்படுவதால் அவர்களுடன் பேசிச் சமாளிப்பதற்காகவே ஆங்கிலம் கற்கும் முயற்சியில் அதிகாரிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி நெறிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொதுவாகச் சீனர்கள் தமது தாய்மொழி தவிர்ந்த ஏனைய மொழிகளைக் கற்பதில் அதிக ஆர்வம் காட்டுவதில்லை. இதனால் ஆங்கிலம் தெரிந்த சீனர்களின் எண்ணிக்கை சீனாவில் மிகக் குறைவாகவே உள்ளது. அவர்களை மட்டும் வைத்துக் கொண்டு ஒலிம்பிக் சமயத்தில் நிர்வாகத்தைச் சமாளிப்பது கடினம் என்று சீன அரசு கருதுகின்றது. (ம-9)

# மேகவதி சுகர்ணோ புத்திரி இந்தோனேசிய அதிபரானார்

ஜகார்த்தா,ஜுலை24

இந்தோனேசியாவில் அதிபராக இருந்த அப்துல் ரஹுமான் வாஹிட் பதவியிலிருந்து விலக்கப்பட்டதை அடுத்து புதிய அதிபராக மேகவதி சுகர்ணோ புத்திரி பதவி ஏற்றுக் கொண்டார்.

முன்னர் துணை அதிபராக இருந்த மேகவதி நேற்று மாலை அதிபராகப் பதவி ஏற்றதாக இந்தோனேசிய வானொலி அறிவித்தது.

முன்னர் தனக்கு எதிராக எழுந்த எதிர்ப்புகளைச் சமாளிக்க மேகவதிக்கு துணை அதிபர் பதவியை வாஹிட் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஏ)

## தொடரும் எதிர்க்கட்சிகளின் போராட்டங்கள்

# கலகம் அடக்கும் பொலிஸாரை தயார் நிலையில் வைக்க உத்தரவு

கொழும்பு, ஜூலை 24

சர்வஜன வாக்கெடுப்பு, நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டமை ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க் கட்சிகள் தொடர்ச்சியாக நடத்திவரும் ஆர்ப்பாட்டங்களை அடுத்துக் கலகம் அடக்கும் பொலிஸாரை உஷார் நிலையில் வைக்குமாறு பொலிஸ் நிலையங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது,

பொலிஸ் பிரிவுகள் தோறும் கலகம் அடக்கும் பொலிஸ் குழுக்களைப் புதிதாக நியமிக்கவும்—

ஆர்ப்பாட்டங்களை, ஊர்வலங்களை, கலகங்களை எவ்வாறு தடுப்பது என்பது தொடர்பான அறிவுரைகளைப் பொலிஸாருக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கின் பணிப்புரையின் கீழ் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களின் தலைமையில் இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கொழும்புச் செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அரசியல் லாபத்துக்காக மக்களைத் தூண்டிவிட்டுக் கலவரத்தை ஏற்படுத்த முயற்சிப்போர் பற்றிய தகவல்களையும் பொலிஸார் சேகரித்து வருகின்றனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## மெதடிஸ்த பெண்கள் முதலிடம்

வடமராட்சி, ஜூலை 24

வடமராட்சி கல்வி வலயம் நடத்திய குழு நிகழ்வு ஆங்கிலப் பாடல் போட்டியில் சிரேஷ்ட பிரிவு, கனிஷ்ட பிரிவுகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இந்தப் போட்டி இம்முறையே முதன்முதலாகக் கல்வித் திணைக்களத்தினால் நாட்டில் அறிமுகப்படுத்தப் பட்டது.

(க-173)

## குளவிகள் தாக்கிய நபர் ஆஸ்பத்திரியில்

மீசாலை மேற்கில் உள்ள வீட்டைப் பார்த்துவரச் சென்றவர் வளவினுள் காணப்பட்ட பனையோலைகளைத் துப்புரவு செய்த போது, கருங் குளவிகளால் தாக்கப்பட்ட சம்பவம் அண்மையில் இடம் பெற்றது.

குளவிகளால் மோசமாகத் தாக்கப்பட்ட இவர், சைக்கிளில் கொடிகாமம் வரை ஏற்றி வரப்பட்டு அங்கிருந்து வாகனம் ஒன்றில் மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டார்.

மீசாலை மேற்கைச் சேர்ந்த பே. சந்திரகாயன் (வயது 52) என்பவரே குளவிகளினால் தாக்கப்பட்டவர் ஆவார்.

(க-117)

## கட்டட வேலைகள் பூர்த்தி

# பழம் பதனிடும் தொழிற்சாலை விரைவில் உடுவிலில் இயங்கும்

சுன்னாகம், ஜூலை 24

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் உதவியுடன் பழம் பதனிடும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப் படவுள்ளது.

இதற்கான கட்டட வேலைகள் பூர்த்தியடைந்து உள்ளன. இயந்திரங்களைப் பொருத்தும் பணி சில வாரங்களில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத் திட்டம் ஆரம்பத்தில் சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத்துடன் இணைந்து சாவகச்சேரியில் செயற்படுத்தப் பட்டது. வேலைகள் ஓரளவு பூர்த்தியடைந்த நிலையில் ஏற்பட்ட யுத்த அனர்த்தம் காரணமாக, இத்திட்டம் நிறுத்தப்பட்டது.

தற்போது மானிப்பாய் வீதியில் உடுவில் கமநல சேந்திர நிலையத்துக்கு அருகில் சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத்துடன் இணைந்து இத் தொழிற்சாலை ஆரம்பிக்கப் படுகிறது.

இத் தொழிற்சாலை இயங்க ஆரம்பிக்குமிடத்துப் பலருக்கு வேலை வாய்ப்பை அளிக்க முடியுமெனவும், குடாநாட்டில் மேலதிகமாகத் தேங்கும் பழங்களைப் பதவிட்டுப் பைகளில் அடைத்து வேறிடங்களுக்கு ஏற்றுமதி செய்ய முடியுமெனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

கடந்த வாரம் பிரான்ஸ் நாட்டிலிருந்து வருகை தந்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளும் இத் தொழிற்சாலையை நேரில் சென்று பார்வையிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-27

## சுன்னாகம் பகுதி வீதி புனரமைப்பு

நீண்டகாலமாகத் திருத்தப்படாதிருந்த சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதி திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை —

சுன்னாகம் பொலீஸ் நிலைய வீதி, முருகேசபண்டிதர் வீதி, சிவபூதராயர் வீதி ஆகியன கடந்த பல வருடங்களாகத் திருத்தம் செய்யப்படாதுள்ளன. மழை காலத்தில் இவ்வீதிகளால் பயணம் செய்வோர் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. (க-27)

# ஆண்டாள் அவதரித்த ஆடிப்பூரம்; அம்பிகையை வழிபட அரியதினம்

இன்று ஆடிப்பூரம் ஆகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

சைவ சமய சான்றோர்கள் மக்களை வாழ்வாங்கு வாழ வைப்பதற்குப் பல்வேறு வழிமுறைகளை வகுத்துள்ளனர். அவ்வகையில் ஒரு வருடத்தை உத்தராயணம், தெட்சணாயனம் என இரு பெரும் முக்கிய காலப் பகுதிகளாக வகுத்துள்ளனர்.

அவ்வகையில் இம்மாதம் ஆடியிலிருந்து தெட்சணாயனம் ஆரம்பமாகின்றது. தெட்சணாயன ஆரம்பமான ஆடிப்பிறப்பு, ஆடிஅமாவாசை, ஆடிப்பூரம், ஆடிச்சுவாதி என்பனவும், ஆடிச்செவ்வாயும் சிறப்பான விரத நாள்களாகவும், வழிபாட்டு நாளாகவும் எம்மக்கள் கொண்டாடுகின்றார்கள். தமிழ்நாட்டிலும் இன்னும் சில இடங்களிலும்ஆடிபதினெட்டாம்நாளை ஆடிப்பெருக்கு எனக்கொண்டாடுவதும் அறியக்கூடியதாக உள்ளது,

இன்று கொண்டாடப்படும் ஆடிப்பூர நன்னாள் எம்மக்களால் விசேடமாகச் சக்தி வழிபாட்டு நாளாகவும், விரத நாளாகவும் போற்றப்படுகின்றது. சிவனுக்குத் திருவாதிரையும், திருமாலுக்குத் திருவோணமும், முருகனுக்கு விசாகமும் போல சக்திக்குப் பூரம் சிறப்பாகப் போற்றப் படுகின்றது. ஆடிப்பூரம் அம்பிகையின் திருவவதாரத் திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது. இந்நாளிலே அம்பாளுக்கு விசேட பூசை வழிபாடுகளும், உற்சவங்களும் அம்மையார் பூப்பெய்திய நன்னாளாகக் கருதி ஆலயங்களில் "பூரகர்மம்" எனும் பூப்பு நீராட்டு வைபவவிழாக்களும், ஊஞ்சல் வழிபாடுகளும் நடத்தப்படுகின்றன.

நீர்வையான்

பூர நட்சத்திரம் மாதந்தோறும் வருவதாயினும் ஆடிப்பூரமே சிறத்த நாளாகக்கொண்டாடப்படுகின்றது. இந்த ஆடிப்பூர நன்னாளிலேயே மகாலெட்சுமியின் அவதாரமாகக் கருதப்படும் ஆண்டாள் அவதரித்த தினமாகவும் கொண்டாடப்படுகின்றது. உலகத் தோற்றத்திற்கு மூலகாரணம் சக்தியே என்பதையும் உணர்த்த; "ஆடி முளை தேடி நடு" எனவும், "ஆடி உழவு தேடி உழுவீர்" எனவும் நம் முன்னோர் இம்மாதத்தைச் சிறப்பித்துள்ளனர். அன்றியும் தை முதல் ஆனி வரை கோடை காலமாகவும், ஆடி முதல் மார்கழி வரை மாரி மழை காலமாகவும் ஆன்றோர் பிரித்திருப்பதும், ஆடிமாதத்தை மக்கள் சிறப்பாக எதிர்கொண்டு போற்றக் காரணமாகின்றது.

நம் முன்னோர்கள் ஆடி மாதத்திலேயே வயல் உழுது பயிர் செய்ய ஆரம்பிப்பது வழக்கம். இன்று பருவகாலம் பொய்த்துப் போனதனால் இது காலந் தவறி நடைபெறுகின்றது. எனினும் ஆடிமாதத்தில் பல இனப்பட்ட பயிர்களும் முளையிடுதல் இன்றும் காணக்கூடியதாகவுள்ளது. நாம் வாழும் பூமியும், பூமியில் பெறும் நல்விளைவுகளும் சக்தியின் பேராற்றலால், அருளால் கிடைப்பனவே என்பதை நன்றியுணர்வுடன் போற்றிக் கொண்டாடவேண்டியது ஆடிப்பூர நன்னாளாகும். ஆன்றோரால் எமக்கு வகுக்கப்பட்ட நன்னெறி நாளாகவும் இதனைக் கருத முடிகின்றது. எனவே ஆடிப்பூர நன்னாளில் உலகமகா சக்தியாகிய அம்பிகையை வழிபட்டு, நல்லருள் பெறுவோமாக! அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம்பெறலாம்.

★

# சமய சந்நிதிகளில்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் இரண்டாவது ஆடிச் செவ்வாய்த் திருவிழா இன்று பகல் நடைபெறவுள்ளது. (ஐ-86)

★ ★ ★

சித்தன்கேணி ஸ்ரீசிவகாமி சமேத சிவசிதம்பரேஸ்வரர் ஆலய ஆடிப்பூர ருதுசோபன விழா இன்று நடைபெறவுள்ளது.

சிவகாமி அம்பாளுக்கு அபிஷேக ஆராதனை ருதுசோபனம் நடைபெற்று மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தேரில் பவனி இடம்பெறும். (ஐ-175)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் இன்று ஆடிப்பூர விழாவை முன்னிட்டு முற்பகல் 11 மணிக்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறும். (ஐ-17)

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் 51 நாள்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வந்த பன்னிரு ஆழ்வார்கள் பாடிய நாலாயிரம் திவ்விய பிரபந்தப் படிப்பு இன்றுடன் நிறைவு பெறுகிறது.

நிறைவு விழாவை முன்னிட்டு இன்று அங்கு இடம் பெறும் பொங்கல் மற்றும் விஷேட அபிஷேகங்கள், ஆராதனைகளை அடுத்து பன்னிரு ஆழ்வார்கள் சகிதம் ஸ்ரீவரதராஜப் பெருமாள் வீதி உலா வரும் நிகழ்வு இடம் பெறும். (3-15)

★ ★ ★

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

உற்சவக் கிரியைகளை சிவாச்சாரிய திலகம் சிவஸ்ரீ ப. சண்முகராஜக் குருக்கள் நடத்துவார்.

உற்சவ காலங்களில் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம், சிவத்தமிழ் சொல்லழகர் ச. லலீசன் ஆகியோரின் சொற்பொழிவு இடம்பெறும். (ஐ-72)

★ ★ ★

. ஊரெழு கிழானைப்பதி பர்வதபத்தினி அம்மன் ஆலய ஆடிப்பூர தினதீர்த்தஉற்சவம் இன்று காலை நடைபெற உள்ளது. (ஐ-72)

★ ★ ★

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

அடுத்த மாதம் முதலாம் திகதி மாலை 3.00 மணிக்கு சப்பறத்திருவிழாவும், மறுநாள் 2 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 7.00மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

4 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருக் கல்யாணமும் இடம்பெறும். (ஐ-51)

★ ★ ★

வேலணை, பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இந்த நிகழ்வில் எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த் தோற்சவமும் இடம்பெறும். (க-10)

★ ★ ★

நயினாதிவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் ஆடிப் பூரத்திருவிழாவை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை காலை சங்காபிஷேகம் நடைபெற்று விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

★ ★ ★

அளவெட்டி தெற்கு வெளிவயல் முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும்8 ஆம்திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த் தோற்சவமும் இடம்பெறும். (க-27)

★ ★ ★

கொழும்புத்துறை புங்கன் குளம் வில்வையடி நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் ஆடிப் பூர விழா இன்று முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும்.

விசேட அபிஷேகம் மற்றும் பூஜை வழிபாடுகளும் அதனைத் தொடர்ந்து நண்பகல் அன்னதானவைபவமும்இடம் பெறும். (ஐ-17)

★ ★ ★

ஈச்சமோட்டைகலட்டிபுலம் ஞானவைரவர் ஆலயத்தில் இன்று ஆடிப்பூரவிழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் படவுள்ளது.

முற்பகல் 11. 00 மணிக்கு விசேட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து நண்பகல் மாகேஸ்வர பூஜையும் இடம் பெறும். (ஐ-17)

★ ★ ★

ஆடிப்பூரத்தை முன்னிட்டு சுழிபுரம் பகுதியில் உள்ள வழக்கம்பரை அம்பாள் ஆலயம், பத்திரகாளி அம்பாள் ஆலயம், கம்பனை அம்பாள் ஆலயம் ஆகியவற்றில் இன்று விசேட அபிஷேக ஆராதனைகள், ருதுசாந்தி வைபவம் என்பன இடம்பெறும். (க-7-28)

★ ★ ★

கொக்குவில் ஸ்ரீசாயிதுர்க்கா தேவி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 2 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 3 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (க-7)

★ ★ ★

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் இன்று காலை 9 மணிக்கு ஆண்டாள் பூர்வ கர்மம், திருக்கல்யாணம் என்பன நடைபெற்று ஸ்ரீ கிருஷ்ண ஆண்டாள் உள் வீதியுலா வருதலும் இடம் பெறும். [க-7]

★ ★ ★

புலோலி, ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலயத்தின் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா எதிர்வரும் 27 ஆம் திகதிவெள்ளிக்கிழமை காலை 8. 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மகாகும்பாபிஷேக மலர் வெளியீடு எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும் என்று ஆலய அறங் காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர். (க-10)

★ ★ ★

கோப்பாய் வடக்கு பலானை கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 3 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

உற்சவ காலத்தில் தினமும் தெய்வீகச் சொற்பொழிவுகள் இடம்பெறும் என்று ஆலயபரிபாலனசபை அறிவித்துள்ளது.

★ ★ ★

வழக்கம்பரை அம்மன் ஆலயத்தின் மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது,

அன்றைய தினம் நண்பகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். [க-28[

# உதயன்

## எச்சரிக்கை அவசியம்

"தற்போதைய அரசமைப்பை மாற்றியமைப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் ஆணை கிடைக்குமானால் - நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாவிட்டால்கூட - அரசமைப்பை மாற்றமுடியும். மக்கள் ஆணை கிடைத்தால் மாற்றுவேன்".

- இவ்வாறு திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

தனது திட்டத்தை வெளிப்படையாக அறிவித்ததற்காக அவர் பாராட்டப்பட வேண்டியவர்.

தற்போதைய அரசமைப்பை எப்படி மாற்ற முடியும் என்பதற்கு இந்த அரசமைப்பிலேயே தெளிவான ஏற்பாடுகள் உள்ளன.

ஆனால் ஜனாதிபதியின் இப்போதைய அறிவிப்பு, இந்த ஏற்பாடுகளைத் தூக்கி வீசிவிட்டு - தாம் குறிப்பிடப் போகும் புதிய முறையின் கீழ் - அரசமைப்பு மாற்றம் செய்யப்படும் என்பதைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்துகின்றது.

அதாவது - தற்போதைய அரசமைப்புக்கு விசுவாசமாக நடப்பேன் என்று சத்தியப்பிரமாணம் செய்து அந்த அரசமைப்பின் கீழ் அதி உயர் பதவியைத் தக்கவைத்துக்கொண்டு - அதன் கீழ் கடந்த ஏழு வருடங்களாக நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பிரயோகித்து வந்த சந்திரிகா குமாரதுங்க -

எந்த அரசமைப்பைப் பேணிப் பாதுகாப்பேன் என்று விசுவாசமாகச் சத்தியப்பிரமாணம் செய்தாரோ அதை மாற்றும் விடயத்தில் - அந்த அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு முரணாக நடந்து - அந்த அரசமைப்பைத் தூக்கிவீசத் தயாராகிவிட்டார்.

அவரது இந்த அறிவிப்புக்காகவோ அல்லது அரசமைப்பைத் தூக்கி வீசப்போகும் அவரது செயற்பாட்டுக்காகவோ அவரைத் தண்டிக்கக் கோரி அல்லது நடவடிக்கை எடுக்கக் கோரி - நீதிமன்றத்துக்குச் செல்ல முடியாது - ஏனென்றால் ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்ற சட்டப் பாதுகாப்பை இதே அரசமைப்பு அவருக்கு வழங்கியிருக்கின்ற காரணத்தால்.

தற்போதைய அரமைப்பின் வடிவத்தில், முன்னைய ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான அரசு போட்ட பூட்டைத் திறப்பதற்கு -

இனப்பிரச்சினை போன்ற முக்கிய விடயங்களுக்குத் தீர்வைக் காண வழிவிடாத - சாவி அற்ற சூழ்நிலையில், அதை உடைப்பதைத் தவிர வேறுவழியில்லை.

அதாவது - இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற நன்நோக்கத்திற்காக இந்த அரசமைப்பைத் தூக்கி வீச ஜனாதிபதி முயற்சிக்கின்றார் என்றால் அது வரவேற்கத்தக்கதே. அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் அதனை வரவேற்கவும் வேண்டும்.

ஆனால் ஜனாதிபதி தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பை இப்போது - இந்தக் காலகட்டத்தில் - தூக்கி வீச முனைவது நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் தனது சிறுபான்மை அரசைத் தக்கவைப்பதற்கு என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஜனாதிபதி இப்போது செய்ய முயற்சிப்பது நல்ல செயலா என்பது முதல் கேள்வி. அதனை நல்ல நோக்கத்துக்காக அவர் செய்கின்றாரா என்பது அடுத்த கேள்வி.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் திட்டவட்டமான யோசனைகள் ஏதும் வைக்கப்படாத நிலையில் அதன் பெயரால் அரசமைப்பை மாற்றும் முயற்சிக்கு நாம் ஒத்து ஊதலாமா? தமிழ் மக்கள் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டிய விவகாரம் இது.

திட்டவட்டமான யோசனைகள் எதையும் முன்வைக்காமல் -

தனது அரசுக்கு நெருக்கடி கழுத்துக்கு வரும்வரை, அரசமைப்பு மாற்றம் குறித்துச் சிந்திக்காமல் இருந்து விட்டு, இப்போது திடீரென அதைத் தூக்கி வீசும் ஜனாதிபதியின் முயற்சிக்கு நாம் உடந்தை ஆகலாமா?

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இந்த அரசமைப்பு மாற்றப்பட வேண்டும் என்ற சிந்தனை நாடு முழுவதும் உள்ளது. சந்திரிகாவின் வசதிக்காக அரைவேக்காடாக இந்த அரசமைப்பு மாற்றப்பட்டு விட்டால், மீண்டும் இனப்பிரச்சினைத் தீர்வை அடக்கிய அரசமைப்பு மாற்றம் வராமலேயே போய்விடலாம். எனவே நாம் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

---

### யாழ்.மாவட்டக் கல்வி வலயங்களுக்கு

# மாணவர் சீருடைப் பொதி இன்று முதல் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இந்த ஆண்டுக்குரிய இலவச சீருடைகள் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையும் அந்தந்தக் கல்வி வலயங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

வலயங்கள் யாவும் குறிப்பிட்ட திகதிகளில் யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு வாகன வசதியுடன் காலை 9.30 மணிக்கு வந்து சீருடைப் பொதிகளை பெற்றுக் கொள்ளுமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கனசிங்கம் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் - 24 ஆம் திகதி, தென்மராட்சி - 25 ஆம் திகதி, வடமராட்சி, தீவகம் - 26 ஆம் திகதி, யாழ்ப்பாணம் - 27 ஆம் திகதி.

(க-10)

---

## நாட்டு நடப்பு

"கன்னியாம் கனகசம்பன்னா" மென்று
கனிந்தே வேதியரும் செப்பிடவே
இன்புற்றுப் பலரும் அறுகரிசி போட
இனிதே திருமணமும் முடிந்து போச்சு
எண்ணி ஆறாம் மாதத்தன்று
இனியவள் ஈன்றாள் பெரு மகவு
எண்ணத்தில் பேரிடி விழுந்திடவே
எடுத்தான் ஓட்டம் கோட்டடிக்கு
'என்னஇது பெரும் புதினம்?' என்று செப்பி
ஏங்கியே தவித்துவிட்டார் இளைய ஜட்யு.

*- விகடகவி -*

---

### யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் பாராட்டுரை:

# சைவ சமயத்துக்கு வந்த தடைகளை தடுத்து நிறுத்திய சமய நிறுவனங்கள்

## சைவபூஷணம் விருது வழங்கி புலவருக்குக் கௌரவம்

யாழ்ப்பாணம்,ஜூலை24

சைவ சமயத்துக்கு எதிராக உலகளாவிய ரீதியில் பல்வேறு தடைகள், சவால்கள் வந்தவண்ணம் உள்ளன.

எனினும் இதுவரை இந்தத் தடைகள், சவால்களை யாழ்ப்பாணத்தில் நிலைகொள்ளவிடாது தடுத்த பெருமை அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம், சைவ பரிபாலன சபை ஆகியவற்றையே சாரும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர்.

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் 41ஆவது பட்டமளிப்பு விழாவும், சைவப்புலவர் வ.கந்தசாமியின் "சைவபூஷணம்" பட்டமளிப்பு விழாவும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தமது பாராட்டுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.சைவபரிபாலன சபை, அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் ஆகியவற்றின் வளர்ச்சியில் முக்கிய இடம்பெறும் சைவப்புலவர் வ.கந்தசாமியும் இந்தத் தடைகளுக்கு எல்லாம் முகங்கொடுத்துச் செயற்பட்டுள்ளார்.

### சிறந்த கடமை வீரன்

சைவசமயத்தின் சாதனையாளராகவும், சிறந்த கடமை வீரனாகவும் இருந்து சைவத்தோடு இணைந்த வாழ்க்கையை வாழ்ந்து வருபவர் சைவப்புலவர் வ.கந்தசாமி.

சைவத்துக்கு அளப்பரிய சேவையாற்றிய இவர் சிறந்த மனிதநேயம் மிக்கவர். அவ்வாறான மனிதருக்கு மதிப்பளித்து சிறப்புப் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கும் அகில இலங்கை சைவப்புலவர் சங்கமும் பாராட்டுக்குரியதே. அவருடைய வாழ்க்கை முறையும், சமய நடைமுறைகளும் இளஞ் சைவப் புலவர்களுக்கு நல்ல பாடமாக அமைந்துள்ளது.

எம்மை என்றைக்குமே சிறந்த முறையில் வழி நடத்திச் செல்லும் சைவபூஷணம் கந்தசாமிக்கு சைவ மக்கள் யாவரும் கடப்பாடுடையவர்கள்.

இந்நிறுவனங்கள் வளர்வதற்கு சைவப்புலவர் கந்தசாமி போன்றவர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர் என்பதை எவருமே மறுக்கமுடியாது.

யுத்த நெருக்கடிகள் மிகுந்த காலத்திலும் கூட மனந்தளராது சைவ சமயப் பரீட்சைகளை நடத்தி வரும் சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளராக இருந்து செயற்பட்டு வருகிறார்.

இளஞ் சைவப்புலவர்களுக்கு பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படும் இந்த நல்ல நாளிலே சைவப்புலவர் கந்தசாமிக்கு "சைவபூஷணம்" விருது வழங்கிக் கௌரவிப்பது மிகுந்த சிறப்பைத் தருகிறது என்றார்.

### நல்லை முதல்வர் ஆசியுரை

இந்த நிகழ்வில் ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தமதுரையில்:-

பட்டங்களைப் பெறுபவர்கள் அப்பட்டங்களைக் கருவியாகக் கொண்டு மேலும் பணி செய்யவேண்டுமே ஒழிய அவற்றைத் துஷ்பிரயோகம் செய்யக் கூடாது. சைவப்புலவர் சங்கத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் இந்த விழாவில் கலந்துகொள்வதில் மன நிறைவடைகிறேன்.

நம்மவர்கள் செய்கின்ற தவறுகளை நியாயப்படுத்த முயற்சிப்பார்களே ஒழிய, அவற்றை ஏற்றுக் கொண்டு திருந்துவதற்கு முனைவதில்லை.

தாம் சமய நடைமுறைகள் எல்லாவற்றையும் பிழையாகச் செய்துவிட்டு, தீமை விளையும்போது இறைவனிலே பழியைப் போட்டுவிடுவார்கள். "எல்லாம் அவன் செயல்" என்று கூறி பழியை இறைவன் மீது போடுபவர்கள் தமக்கு நன்மை ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் மட்டும் இறைவனை மறந்து எல்லாவற்றுக்கும் தானே காரணம் என்று கூறுவார்கள்.

சைவ மக்களுக்கு சைவசமயம் சம்பந்தமாக ஏற்படுகின்ற சந்தேகங்களைத் தீர்த்து வைக்கின்ற பொறுப்பு சைவப்புலவர்களுக்கே உரியதாகும்.

இன்று "சைவ பூஷணம்" பட்டம் பெறும் வ.கந்தசாமியை அவரது பிள்ளைகள் வெளிநாடு வந்து தங்களுடன் தங்கி இருக்குமாறு பல தடவைகள் அழைத்தும் கூட அவர் தமது சொந்த இடத்திலே மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்பதற்காக இங்கேயே தங்கி இருந்து பணிபுரிந்து வருகின்றார்.

அப்படியான ஒரு பெரியவருக்கு பட்டம் வழங்கிக் கௌரவிப்பது மிகவும் மன நிறைவைத் தருகிறது - என்றார்.

தொடர்ந்து சைவப்புலவர் சு.செல்லத்துரை வாழ்த்துரை வழங்கினார்.

(க-4-7)

---

## உடைந்த மதகு குறித்து எச்சரிக்கை

நவாலி,ஜூலை24

பொன்னாலை வீதி மானிப்பாய்ச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள இராணுவக் காவலரணுக்கு அண்மையில் உள்ள மதகு ஒன்று உடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இந்தப் பெருந்தெருவால் ஏராளமான வாகனங்களும், பொதுமக்களும் பிரயாணம் செய்வதால் விபத்துக்கள் நிகழும் அபாயம் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விபத்து ஏற்படுமுன்னர் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் இந்த மதகைத் திருத்த வேண்டுமென்றும் மக்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

(க-100)

## கப்பலில் வருகிறது சிமெந்து!

யாழ்ப்பாணம்,ஜூலை24

2 ஆயிரம் மெற்றிக்தொன் சிமெந்துடன் ஹெந்தல கப்பல் இன்று பருத்தித்துறை இறங்குதுறைக்கு வருகிறது.

இந்தச் சிமெந்து இறக்கப்பட்டதும் அண்மைக் காலத்தில் குடாநாட்டில் நிலவிவந்த சிமெந்துத் தட்டுப்பாடு நீங்கிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை -

குடாநாட்டு வர்த்தகர்களுக்கென சஜிந்த கப்பலில் 2 ஆயிரம் மெற்றிக்தொன் பொருள்களும், கிரிந்த கப்பலில் 3 ஆயிரம் மெற்றிக்தொன் பொருள்களும் பருத்தித்துறைக்கு எடுத்துவரப்பட்டு இறக்கப்பட்டு வருவதாகவும் யாழ்.செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

(க-6)

---

### யாழ்.முற்றவெளிப் பகுதியில் உள்ள

# சேதமடைந்த தபாலகக் கட்டடம் இடித்து அகற்றப்படுகின்றது

அரியாலை,ஜூலை24

யாழ்.முற்றவெளிப் பகுதியில் போர் அனர்த்தங்களால் சேதமடைந்திருக்கும் மத்திய தபாலகக் கட்டடத்தை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் புதிய கட்டடம் ஒன்றை அமைக்கும் முன்னேற்பாடாகவே இடிந்துபோய்க் கிடக்கும் பழைய கட்டடம் அகற்றப்பட்டு வருகின்றது.

இந்தப் பழைய கட்டடத்தை முற்றாக அகற்றுவதற்குக் குறைந்தது ஒரு மாத காலம் எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஜ-17)

---

### தொண்டர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சை:

# தோற்றத் தவறியவர்களுக்கு மேலதிக பணிப்பாளர் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் தொடர்ந்தும் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிக்கொண்டிருப்போரில் -

அண்மையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தோற்றத் தவறியவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9:00 மணிக்கு மேலதிக மாகாண கல்விப் பணிமனைக்கு உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ச.நா.தணிகாசலம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு வருகை தரும்போது கற்பிக்கும் பாடசாலையின் அதிபரையும் அழைத்து வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-10)

---

### நாளை

ஆடி 9
புதன்கிழமை
திதி: பஞ்சமி
பிற்பகல் 2.16 வரை.
நட்சத்திரம் : உத்தரம்
முற்பகல் 5.06 வரை.
கருட பஞ்சமிநாள்
சுபநேரம் : 4.32 - 6.02
ராகுகாலம் : 12.02 - 1.32
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பேச்சைப்போல் மௌனமும் ஓர் உயர்ந்த கலையாகும்.

*- ஹொலண்ட்.*

---

### கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



யாழ்ப்பாணத்தில் காணப்படும் மிதிவெடிகளில் ஒரு வகை.
(அதன் வடிவத்தை மதிப்பிடுவதற்காகப் படத்தில் தேங்காய் வைக்கப்பட்டுள்ளது)

## வல்லுறவுச் சம்பவங்களைக் கண்டித்து

# வடக்கு – கிழக்கில் தொடர்ச்சியான சத்தியாக்கிரகப் போராட்டங்கள்

## தமிழ்க்கட்சிகள் ஒன்றுகூடித் தீர்மானம்

வவுனியா, ஜூலை24

தமிழ்ப் பெண்கள் மீதான படையினரின் பாலியல் வல்லுறவுச் சம்பங்களைக் கண்டித்து வடக்கு - கிழக்கில் தொடர்ச்சியான சத்தியாக்கிரகப் போராட்டங்களை நடத்த தமிழ்க் கட்சிகள் ஒன்றுகூடித் தீர்மானித்துள்ளன.

இது தொடர்பான கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடைபெற்றது. புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ்அணி), தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ்க காங்கிரஸ் ஆகிய தமிழ்க் கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் முதலாவது சத்தியாக்கிரகப் போராட்டத்தை எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை வவுனியாவில் நடத்துவது என்றும் - தொடர்ந்து மேற்படி சத்தியாக்கிரகப் போராட்டத்தை வடக்கு - கிழக்கின் ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிப்பது என்றும் - தீர்மானிக்கப்பட்டது. (க-7)

### மாநகர சபை ஊழியர்களுக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஊழியர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஊழியர்கள் நலன் பேணுவதற்காக இரண்டு லட்சம் ரூபாவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கியுள்ளார்.

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் நிதியிலிருந்து இதற்கான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (க)


உ
ஓம் மீனாட்சி துணை

நீர்வேலி மாசிவன்

அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோயில்

ஆடிப்பூர விழா

மேற்படி ஆலய அலங்கார உற்சவ நிறைவு நாளான ஆடிப்பூர தினமாகிய இன்று (24-07-2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல 2.00 மணி முதல் விசேட பூஜையும் திருவூஞ்சலும் முத்துச் சப்பறத்தில் அம்பாள் திருவீதியுலாவரும் காட்சியும் நடைபெறும்.

பாராட்டும் பரிசளிப்பும்

※ ஆலய அலங்கார உற்சவ காலத்தில் "கம்பராமாயணம்" தொடர் விரிவுரையாற்றிய
புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி ஆசிரியர்
"சிவத்தமிழ் சொல்லழகர்"
திரு.ச. லலீசன்
அவர்களைப் பாராட்டும் நிகழ்வு.

※ ஆலயத்தால் பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட "சமய அறிவுப் போட்டி" யில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு நிகழ்வு என்பன தொடர்ந்து நடைபெறும்.

பாராட்டுரை:- திரு.க.தர்மராஜா
(தமிழாசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சாரங்கா நகைமாடம்,
சாரங்கன் நகைமாடம் அன் சென்ரர்.
(விழா உபயகாரர்)

ஸ்ரீ மீனாட்சி அம்பாள் கோயில்,
மாசிவன்,
நீர்வேலி.

(C/17532)



31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
04
.
09
.
1930



மறைவு
24
.
06
.
2001

அமரர் பெரியதம்பி தம்பிராசா

அன்புடனும் பாசத்துடனும் திகழ்ந்தீரே!
உமது பிரிவைத் தாங்க முடியவில்லையே!!

ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (24.07.2001) செவ்வாய்க்கிழமை அமரரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காளிகோயிலடி,
பத்தமேனி,
அச்சுவேலி.

- குடும்பத்தினர்.

(90353)



உ
சிவமயம்

# நயினாதீவு ~ ஸ்ரீநாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை



## அன்னதான சபையின் ஆரம்ப கர்த்தாக்களான 25 அங்கத்தவர்களின் உருவப்படத் திரை நீக்கம்

ஆடிப்பூர அன்னதானமும் (மாகேஸ்வர பூசை) 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் ஆரம்பகர்த்தாக்களான 25 அங்கத்தவர்களின் உருவப்படத் திரைநீக்க விழாவும் இன்று (24-07-2001) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும். மேற்படி நிகழ்வுக்கு நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைத் தரிசிக்க வரும் அம்பிகை அடியார்களும் மேற்படி சபைக்கு நிதியுதவி, பொருளுதவி வழங்கிய பெரியார்களும், ஆரம்பகால அங்கத்தவர்களின் குடும்பத்தினரும், நயினைவாழ் அன்பர்களும், அபிமானிகளும் தவறாது சமுகம் தந்து இந்நிகழ்வு சிறப்புற அமைய ஒத்துழைப்பு நல்குமாறு அம்பிகையின் துணைகொண்டு உங்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

*1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையும் 25 ஆரம்பகால அங்கத்தவர்களின் பெயர்கள் விவரம் வருமாறு:*

01.திரு.சி.க.தம்பையா J.P அவர்கள (முன்னாள் கிராம சபைத் தலைவர், அன்னதான சபையின் ஆரம்பகாலத் தலைவர்)

02.திரு.வே.கந்தையா J.P அவர்கள (ஆசிரியர், முன்னாள் கிராம சபைத்தலைவர், அன்னதான சபையின் ஆரம்பகால உபதலைவர்)

03.திரு.ஆர்.ஆர் பூபாலசிங்கம் J.P அவர்கள (அன்னதான சபையின் ஆரம்பகாலச் செயலாளர்)

04.திரு.க.வே.பரமலிங்கம் J.P அவர்கள (அன்னதான சபையின் ஆரம்ப கால இணைச் செயலாளர்)

05.திரு.நா.கணபதிப்பிள்ளை அவர்கள (அன்னதான சபையின் ஆரம்பகாலப் பொருளாளர்)

06.திரு.சி.இ.சின்னத்துரை அவர்கள (அன்னதான சபையின் ஆரம்பகால இணைப் பொருளாளர்)

07.திரு.வே.க.த.தம்பிமுத்து அவர்கள (அன்னதான சபையின் இடைக்காலத் தலைவர், பிரபல வர்த்தகர்)

08.திரு.இ.குலசேகரம்பிள்ளை அவர்கள (பிரபல வர்த்தகர்)

09.திரு.சு.கதிரேசு அவர்கள (வைத்திய அதிகாரி)

10.திரு.நா.காராளபிள்ளை அவர்கள (பதில் பொருளாளர், பிரபல வர்த்தகர்)

11.திரு.வே.க.கு.கோபாலபிள்ளை அவர்கள (பிரபல வர்த்தகர்)

12.திரு.க.நாகேஸ்வரன் B.A. அவர்கள (ஆசிரியர்)

13.திரு.இ.முத்தையா அவர்கள (பிரபல வர்த்தகர்)

14.திரு.கா.க.சிவசிதம்பரம் அவர்கள (முன்னாள் கிராம அதிகாரி)

15.திரு.சி.நா.மதியாபரணம் J.P அவர்கள (பிரபல வர்த்தகர்)

16.திரு.வே.ச.இரத்தினம் அவர்கள

17.திரு.க.குமரையா அவர்கள (பிரபல வர்த்தகர்)

18.திரு.வே.கந்தசாமி அவர்கள (விவேகானந்தா அச்சகம்)

19.திரு.நா.வே.சிவப்பிரகாசம் அவர்கள (முன்னாள் கிராம அதிகாரி)

20.திரு.வே.க.த. கிருஷ்ணசாமி J.P அவர்கள (முன்னாள் கிராம சபைத் தலைவர்).

21.திரு.ஐ.இ.பரமலிங்கம் அவர்கள (பிரபல வர்த்தகர்)

22.திரு.வே.மு.சண்முகராசா அவர்கள (பிரபல வர்த்தகர், நிர்வாகப் பொறுப்பாளர்)

23.திரு.ந.சுப்பிரமணியம் அவர்கள (உபசெயலாளர், பிரபல வர்த்தகர்)

24.திரு.ஆ.சி.பரமசாமி அவர்கள (பிரபல வர்த்தகர்)

25.திரு.வே.பரமசாமி அவர்கள (பிரபல வர்த்தகர்)

"மக்கள் தொண்டே மகேஸ்வரன் தொண்டு
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்"

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினராகிய நாம் தொடர்ந்து 42 வருடகாலமாக நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு அம்பிகையின் துணைகொண்டு அன்னதானம் வழங்கி வருகின்றோம். இச்சேவை தொடர்ந்து நடைபெறுவதற்கு அம்பாள் என்றும் துணை நிற்பாளாக.

சுபம்!

திரு.த.சிவானந்தன் அவர்கள்
(கௌரவ தலைவர்)
சாஸ்தா 133, 5ஆம் குறுக்குத்தெரு,
கொழும்பு 11. தொலைபேசி: 344960

திரு.கு.சிறிகாந்தராசா அவர்கள்
(கௌரவ பொருளாளர்)
முகிலன், 195, ஓல்கோட் மாவத்தை,
கொழும்பு 11. தொலைபேசி: 449565

திரு.கு.சாந்தலிங்கம் அவர்கள்
(கௌரவ செயலாளர்)
ஸ்ரீ நயினாதீவு நாகபூஷணி
அமுதசுரபி மண்டபம்

விளம்பர அன்பளிப்பு:

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கிரியராஜ் சர்வதேச தொலைத் தொடர்பு சேவை
மணியர்பதி லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
T.P. 2935

(C/17531)

# கதிர்காமக் கந்தனை கண்டு களித்து சீவன் முத்தராக வாழ முயல்வோம்!

**நல்லூர் சட்டநாதர் ஆலயத்துக்குப் பின்புறமாக அமைந்துள்ள ஸ்ரீபாலகதிர்காமம் ஆலயத்தின் உற்சவம் ஆரம்பமாகி இருக்கிறது.**

**கதிர்காமக் கந்தனை தென்னிலங்கைக்கு நேரில் சென்று தரிசிக்க முடியாத அடியார்களுக்கு பாலகதிர்காமம் ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது. கதிர்காமக் கந்தனின் உற்சவத்தை நினைந்து அடியார் ஒருவர் வரைந்த கட்டுரை இது.**

இறையருளானது ஊற்றெடுத்து வெள்ளமாகப் பெருகி தெய்வ நம்பிக்கை இலங்கை எங்கும் பரவி நிற்கச் செய்யும் திருத்தலம் கதிர்காமம். இது 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற உண்மையை உள்ளந்தோறும உதிக்கச் செய்கிறது. இந்த அருள் ஊற்று ஆண்டு தோறும் அலையலையாக கதிர்காமத்துக்கு வரும் ஆயிரக்கணக்கான அடியார்களின் "அரோகரா" மந்திர ஒலிக்குள்ளே இந்தத் தெய்வீக அருளொளி சற்று அனுபவிக்கப்படுகின்றது.

இமயம் முதல் குமரி வரை இந்தியாவில் பல தலங்களையும் தரிசித்து விட்டு கதிர்காமத்துக்கு வருகின்ற பெரியோர் பலர், கைலை, காசி, சிதம்பரம், ஜெகந்நாத பாண்டுரங்கம், பழநி ஆதியாம் சிறந்த தலங்களைப் போல கதிர்காமத்திலும் நாம் அருள் வசப்பட்டு சொல்லொணாத இன்ப நிலையை அடைகின்றோமெனக் கூறுகின்றனர். இவ்விடங்களில் தமக்கு அற்புத அனுபவங்கள் மூலம் உலகத்தையும் நடத்துகின்ற யாதினும் வல்ல ஒரு சித்து இருப்பதாக உணர்கின்றோம் என்றும் அதனுடைய வல்லமையின் முன் மனித வல்லமை பெரும் மலைப்பிழம்பின் முன் ஒரு துளி மண் எவ்வளவோ அவ்வளவு அற்பமானதென உணர்கின்றோமென்றும் கூறுகின்றனர்.

கதிர்காம யாத்திரையானது அக்காலத்தில் பெரிய தவமாயமைந்தது. கதிர்காமத்தில் தவமியற்றியவர்களும பெரிய சித்தராக விளங்கினர். இவர்களுள் கலியாண கிரிசுவாமிகள் என வா[illegible] வரும், முத்துலிங்க சுவாமிகள் [illegible] அழைக்கப்படும் சித்தர் கால[illegible] விளங்கியவர் வரலாற்றைச் சிந்த[illegible]க் சிந்திக்க சித்தம் களிக்கின்றது. நாம் முருகனருள் வெள்ளத்தில் திளைக்கின்றோம். வட இந்தியாவில் பிறந்த இவர் அங்கே சந்நியாசியாய் வி[illegible] கதிர்காமத்தில் முருகப் பெ[illegible]டைய அருளொளி விளங்குவ[illegible]ளவிய பட்டார். வட இந்தியாவிலே அப்பெருமானுடைய அருள் விளங்கவில்லை. இக் காரணத்தால் இலங்கையில் தங்கியிருக்கும் முருகப் பெருமானைக் கயிலைக்குக் கொண்டு போக வேண்டுமென்று சித்தத்தில் கொண்டார். இந்த நோக்கத்துடன் இலங்கைக்கு வந்து கதிர்காமத்தையடைந்தார்.

முருகப் பெருமானைக் காணும் பொருட்டு தவம் செய்தார். பன்னிரண்டு வருடங்கள் நித்திரையே இல்லாது தவம் புரிந்து வந்தார். இக காலத்தில் ஒரு வேட்டுவச் சிறுவனும் சிறுமியும் அவருக்குத் தேவையான குற்றேவல்களைப் புரிந்து அவரைக் கவனித்து வந்தனர். ஈற்றில் வெகு காலம் கடுந்தவம் புரிந்தும் கந்தனைக் கண்டிலேனே என்று கலியாணகிரியார் அழுது கொண்டு துயின்றுவிட்டார். அப்போது வேட்டுவச் சிறுவன் வந்து அவரை எழுப்பினான். 'எத்தனையோ வருடங்களுக்குப் பின் இப்போதுதான் கண்துயின்றேன். அதை நீ அறிந்திருந்தும் ஏன் என்னுடைய நித்திரையைக் குழப்பினாய்?' என்னும் கோபக் குறிப்புடன் பேசினார். அதற்குச் சிறுவனும் சில சாட்டுக்



களைச் சொல்லி முணுமுணுத்து குறும்பாகச் சிரித்தான். முனிவருக்குக கோபம் அதிகரித்தது. எழுந்து சிறுவனைத் துரத்திக்கொண்டு சென்றார். சிறுவன் ஆற்றுக்குள் இருந்த சிறு தீவை அடைந்தான். அங்கே முனிவரும் தொடர்ந்தார். அவ்வேளை சடுதியாய் வேடுவச் சிறுவனைக் காணவில்லை. உடனே சுப்பிரமணியப் பெருமான் முன் தோன்றினார். அப்போதுதான் இது காலும் தன்னைக் கவனித்து வந்த சிறுவனும் சிறுமியும் சுப்பிரமணியரும் வள்ளிநாயகியருமே என விளங்கிக்கொண்டார். உடல் முழுவதும் உயிரும் உருகிவிட்டார். முருகப்பெருமானை உடனே விழுந்து வணங்கினார்; பலவாறாக அழுது குழறிவிட்டார். ஆடினார்; பாடினார்; கமல பாதத்தை உச்சி மேற்கொண்டு ஆனந்த மேலீட்டினால் ஆடினார். தான் இது காலும் தவம் செய்தது கார்த்திகேயப்பிரானை கயிலைச் சாரலுக்குக் கூட்டிச் செல்லவே என்பதை நினைவு கூர்ந்தார். கயிலைச் சாரலுக்குத் திரும்பவேண்டும் என்று அவரை அன்புடன் வேண்டினார். ஆனால், தன்னை விட்டுவிட்டுப் போகக கூடாதென வள்ளியம்மை வேண்டி நின்றார்.

கூப்பிய கையுடன் முனிவர் ஒரு பக்கமும் மறுபக்கம் இரக்கப் பார்வையுடன் வள்ளியம்மையார் கையைப் பிடித்து இழுத்த வண்ணமும் இடை நடுவில் நின்ற கார்த்திகேயப் பிரானார் கலியாண கிரியார் மேல் பதித்த ஒரு பார்வையால் பழவினைகளெல்லாம் மாறி ஒளிந்து போக ஞான ஒளிபெற்று சீவன் முத்தரானார். கலியாண கிரியார் வேறு, முருகப் பெருமான் வேறு என்ற பேதமின்றி வந்துவிட்டார். வள்ளியம்மையார் முருகப் பெருமானை வடகைலைக்குக் கூட்டிச சென்றால் நான் வாழமாட்[illegible]ன [illegible] [illegible]பாணகிரி சுவாமிகளிடம் மாங்[illegible] பிச்சை கேட்டார். அப்போது முருகப் பெருமான் கதிர்காமத்தில் தங்குவதற்கு கலியாணகிரியார் இசைந்தார். மூவரும் கதிர்காமத்தில் உறைந்துவிட்டனர். மூவருமே ஒருவராய் இன்றும் உறைந்து அடியார்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றனர்.

இவரே கதிர்காமத்தில் இனிது விளங்கும் கதிர்காம இரகசியத்துக்கு கர்த்தாவாகினார். இந்த இரகசியம் ஒரு தங்கத் தகட்டில் வரையப்பட்ட மந்திரமாகும். அந்த யந்திரத்தைக் கலியாணகிரி சுவாமிகள் பூசைசெய்து வந்த பின்னர் ஒரு பேழையிலமர்த்தினார். இந்த யந்திரத்தை வைத்துப் பூட்டப்பட்டிருக்கும் பேழையையே யானை மேல் வைத்து வலம் வருகினறனர்.

சிரேஷ்ட சட்டத்தரணி
**எஸ்.கனகரத்தினம்**

கதிர்காமத்தில் நடப்பது போலவே பாலகதிர்காம முருகன் கோயிலும் எங்கள் குமரக் குருக்களால் ஆரம்பிகப்பட்ட திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. எங்கள் உள்ளத்தில் என்றும் ஒளிமயமாய் கதிர்காமப் பெருமான் விளங்கிக் கொண்டிருக்கின்றான். அவனைக் கண்டு களித்துச் சீவன் முத்தராக வாழ யாம் முயலவேண்டும். கதிர்காமத்தில் பெறும் அனுபவங்கள் மூலம் ஓர் உண்மை விளங்குகின்றது. அது யாம் எம் உள்ளத்துள் ஆழ்ந்து சென்று ஒரு தெய்வீக வாழ்க்கையை எமது நித்திய வாழ்க்கையாய் அமைத்துக்கொள்ளலாம் என்பதற்குக் கருத்திலிருக்கும் கதிர்காமத்தான் எமக்குத் துணை புரிவாராக! ☆

# எதிரணி ஆர்ப்பாட்டத்தை அடக்க அரசுக்கு 63 லட்சம் ரூபா செலவு!

கொழும்பு,ஜூலை24

ஐ.தே.கட்சியின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை கொழும்பு நகரில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை அடக்குவதற்குப் பொலீஸார் எடுத்த நடவடிக்கைகளுக்காக 63 லட்சம ரூபா செலவிடப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்கள வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கொழும்பு நகரினுள் நுழையும் ஆறு பிரதான நுழைவாயில்களூடாக ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் மருதானையை நோக்கி முன்னேற முற்பட்ட போது பொலீஸார் கண்ணீர்ப்புகைக்குண்டு வீச்சு, இறப்பர் குண்டு வேட்டு முதலியவற்றை மேற்கொண்டனர். அத்துடன் புதிதாக இரும்புக் கேடர்களினால் செய்யப்பட்ட வீதித் தடைகளையும் போட்டிருந்தனர்.

அதேவேளை-

இந்த நடவடிக்கையின் போது பொலீஸார் 600இற்கும் மேற்பட்ட கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இறப்பர் குண்டுகளையும், பெருமளவு துப்பாக்கி ரவைகளையும் பயன்படுத்தினர் என்றும் -

கண்ணீர்ப் புகைக்குண்டு ஒன்றின் விலை 3ஆயிரம் ரூபா எனவும்- தகவல்கள் வெளியாகி உள்ளன.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்ப்பாணம் நகர்மைய றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில், ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான உயர்கல்வி, வேலைவாய்ப்புப் பெறுவது ஆகியன தொடர்பான கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு 'அருண்ஸ் எஃபோட்' 3ஆவது மாடியில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் அனைத்து றோட்டறக்ட் கழகங்களின் உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-3)

## கிளாலியில் வெடி விபத்து

தென்மராட்சி,ஜூலை24

கிளாலி முன்னரங்கப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெடி விபத்து சம்பவம் ஒன்றில் சிப்பாய் ஒருவர் காணாமற் போயுள்ளதாகக் கூறப்பட்டது. (ம-117)

## தேடுதல்

சாவகச்சேரி,ஜூலை24

கொடிகாமம், வரணி, தாவளை, இயற்றாளை உள்ளிட்ட பகுதிகள் நேற்று முன்தினம் காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. இதனால் கொடிகாமம் நெல்லியடிப் பகுதிகளுக்கான போக்குவரத்துகள் தடைப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.(ம-31-117)


## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

24.07.2001

HAPPY BIRTHDAY



விடத்தற்பளை - தும்பளையைச் சேர்ந்த
தங்கவடிவேல் - ரோகினி தம்பதிகளின் செல்வப் புதல்வி

## செல்வி தரட்சாயனி

தனது 2ஆவது பிறந்த நாளை இன்று (24.07.2001) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை விடத்தற்பளையில் இருக்கும் அப்பப்பா, பெரியப்பா குடும்பம், பெரிய சித்தப்பா குடும்பம், பெரிய மாமா குடும்பம், சுவிஸில் இருக்கும் சின்ன மாமா குடும்பம், லண்டன் குட்டி அண்ணா, தும்பளையைச் சேர்ந்த அம்மம்மா, சிற்றம்பல மாமா குடும்பம், மச்சாள்மார்களான ஜாழினி, நிலாந்தினி, அக்காமார், அண்ணாமார், விடத்தற்பளை நாகேஸ்வரி அப்பம்மா ஆகியோர் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*விடத்தற்பளை.* (90327) க.நாகராசா (மாமா)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

24.07.2001

HAPPY BIRTHDAY



## செல்வன் த.ஜெயகுமரன்

பருத்தித்துறையைச் சேர்ந்த
தயாநிதி - ஜெயகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன
செல்வன் த.ஜெயகுமரன்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (24-07-2001) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, கோண்டாவிலில் இருக்கும் மாமா, மாமி, அத்தான், மச்சாள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் முருகன் அருள் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*'முத்துமாளிகை",* **பேரன், பேர்த்தி.**
*பத்திரகாளி கோயில்வீதி,*
*பருத்தித்துறை.* (C/17431)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் இராமநாதர் சுப்பிரமணியம்**

*(முன்னாள் பல நோ.கூ.சங்கக் கிளை முகாமையாளர், நெடுந்தீவு)*

திதி:- 2001.07.24

ஆண்டு ஒன்று சென்றாலும் எம் மீது
நீங்கள் கொண்டிருந்த அன்பு மறையவில்லை!
தேசத்தைவிட்டு நீங்கள் சென்று
ஒரு வருடம் சென்றிடினும்
நேசத்தால் உங்களை என்றும்
நெஞ்சில் தீபமாய் ஏற்றுகின்றோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும்:

*15ஆம் வட்டாரம்,* மனைவி, மக்கள்,
*நெடுந்தீவு.* (90341) மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# யுத்தத்தை நிறுத்தச் செய்யும் அதிகாரம் செஞ்சிலுவைக் குழுவுக்கு கிடையாது

## பத்திரிகையாளர் மாநாட்டில் விளக்கமளிப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை24

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு உலகில் எத்தனையோ நாடுகளில் பிராந்திய அலுவலகங்களை அமைத்து மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றபோதும் அதன் தலைமையகம் அந்தந்த நாடுகளுடன் செய்துகொள்ளும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே அதன் செயற்பாடுகள் அமையமுடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி அன்ரன் செல்வராஜா.

கடந்த சனியன்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் செயற்பாடுகள் மற்றும் அவற்றுக்குள்ள வரையறைகள் பற்றி விளக்கமளிக்கையில் அவர் தெரிவித்ததாவது:-

பொதுமக்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு குறித்து தவறான விளக்கங்களைக் கொண்டுள்ளார்கள். மனிதாபிமானம் தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையையும் எமது சங்கத்தால் மேற்கொள்ள முடியும் என நினைக்கிறார்கள்.

உண்மையில் எமது ஒப்பந்தங்களை மீறி நாம் செயற்பட விளைந்தால் இலங்கை அரசு எம்மை நாட்டைவிட்டு வெளியேற்றிவிடும். சர்வதேச ரீதியில் முதன் முதலாக இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள் என்ற அவப்பெயரும் எமக்கு ஏற்படும.

இடம்பெயர்முகாம் ஒன்றில் குடிதண்ணீர் வசதியை எம்மால் ஏற்படுத்திக் கொடுக்கமுடியும். ஆயினும், குடிதண்ணீர் வசதியில்லாத - சாதாரண ஓர் இடத்தில் - அவ்வசதியை எம்மால் ஏற்படுத்த முடியாது. அங்கு அதற்குரிய சுகாதார சேவை அமைப்புக்கள் உள்ளன.

எமக்குரிய ஒப்பந்தங்களுக்கு அமைவாக நடுநிலையான - பாரபட்சமற்ற - (Neutral and Impartial) செயற்பாடுகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

இன்று 60 இக்கும் மேற்பட்ட நாடுகளில் எமது சங்கத்தின் பிராந்திய அலுவலகங்கள் உள்ளன. எனினும் 188 நாடுகள் வரை எம்முடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. 10ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆளணியை கொண்ட எமது சங்கத்திற்குரிய நிதிகள் அரசமைப்புக்களிடமிருந்தும், பல்தேசிய அமைப்புக்களிடமிருந்தும், தேசிய சங்கங்களிடமிருந்தும், தனியார் மற்றும் பொதுநிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

### கைதிகளுடன் தொடர்பு

எமது அமைப்பு உலக நாடுகளில் ஏறத்தாழ ஆயிரத்து 700 தடுப்பு முகாம்களில் உள்ள 2லட்சத்துக்கு மேற்பட்ட கைதிகளுடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளது.

கைதிகளைப் பதிவுசெய்து அவர்கள் காணாமற் போவதைத் தவிர்ப்பதும், உறவினர்களுடன் அவர்களுக்கு தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் மற்றும் அங்கு அவர்களின் நிலைகளை மேம்படுத்துதல் போன்றனவும் எமது நடவடிக்கைகள் ஆகும். சாசனங்களின் மூலம் இவை எல்லைப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மீறல்கள் இடம்பெறும் போது சம்பந்தப்பட்டவர்களுக்கு நாம் அழுத்தத்தை மட்டுமே வழங்கமுடியும்.

### வீசாரிக்க அதிகாரமில்லை

குறித்த நபர் காணாமற் போனமை தொடர்பாக எமக்குக் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் நாம் அந்நபரைத் தேட முடியும். அது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள எமக்கு அதிகாரமில்லை. மரணம் தொடர்பான அவசர செய்திகளைப் பரிமாறவும், நோயாளர் கப்பல் சேவையை மேற்கொள்ளவும் எமக்கு அதிகாரம் உண்டு.

முதன் முதல் இலங்கையில் 1971 - 1977ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சி தொடர்பான சம்பவங்களை எமது அமைப்பு கண்காணித்தது. இரண்டாம் முறையாக 1989-1991ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சியையும் கண்காணிகக்கும் வாய்ப்பு எமது சங்கத்திற்குக் கிடைத்தது.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா அரசினால் 1989ஆம் ஆண்டு இலங்கைக்கு அழைக்கப்பட்ட எமது அமைப்பு 1990இல் அதன் செயற்பாடுகளை வடக்கு-கிழக்கிற்கு விஸ்தரித்திருந்தது.

எமது சாசனங்களுக்கு அமைவாக - அதனை ஏற்றுக்கொண்டுள்ள - நாடுகளில் உள்நாட்டு யுத்தம் இடம்பெறும்போது கனரக ஆயுதங்களைப் பாவிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு சாசனம் மீறப்படுமிடத்து போதிய நடவடிக்கைகள் எடுக்க எமக்கு அதிகாரமில்லை.

செஞ்சிலுவைக் குழுவால் இலங்கையில் யுத்தத்தை நிறுத்தவோ அன்றி சமாதானத்தை ஏற்படுத்தவோ முடியாது. மனிதாபிமானப் பணிகளை மட்டுமே மேற்கொள்ளமுடியும்.

- இவ்வாறு அவர் விளக்கமளித்தார்.

இம்மாநாட்டில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்.வதிவிடப் பிரதிநிதி சேர்ச் மமி, யாழ்.அலுவலக உத்தியோகத்தர் எஸ்.சில்வெஸ்டர் மற்றும் பத்திரிகையாளர்களும் கலந்துகொண்டனர். (ஐ-9-10-3)



ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத் திறப்புவிழா அண்மையில் சங்கத் தலைவர் சி.மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட ஜி.ரீ.இசட் யாழ்.புனரமைப்புத் திட்டத் தலைவர் ஈவகாட் கல்பா, சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மு.பாலசிங்கம் ஆகியோர் உள்ளனர்.

*(படம்:சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

# அமைச்சர்கள் ஊழல் புரிவதை ஒப்புக்கொள்கிறார் ஜனாதிபதி

## ஆனால் நடவடிக்கை எடுக்க அவர் தயக்கம்

கொழும்பு, ஜுலை24

சில அமைச்சர்கள் ஊழல் புரிவது எனக்குத் தெரியும். ஆனால் அரசமைப்பின் சில வரையறைகள் காரணமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கமுடியாதுள்ளது.

கடந்த வெள்ளியன்று மல்வத்த மகாநாயக்கர்களைச் சந்தித்து உரையாடிய சமயம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது ஆதங்கத்தை இவ்வாறு வெளிப்படுத்தி இருக்கிறார்.

முன்னாள் புத்தசாசன அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி சகிதம் ஜனாதிபதி மல்வத்த நாயக்கரைச் சந்தித்து உரையாடினார்.

சில அமைச்சர்கள் தாங்கள் சொந்த நலங்களிலேயே அக்கறையுள்ளவர்களாக இருக்கின்றனர் என்று மல்வத்த நாயக்கர் அப்போது ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி அது குறித்து நாயக்கருக்கு விளக்கமளிக்கையில்:-

நாடாளுமன்றத்தில் ஓர் அரசின் பெரும்பான்மைப் பலம் மிகவும் நலிவுற்று இருக்கையில், ஊழல் புரியும் அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் அவர்கள் எதிர்க்கட்சிப் பக்கம் தாவிவிடக்கூடும். எனினும் இத்தகைய ஊழல்களுக்கு எல்லாம் காரணமாக இருப்பது இன்றைய அரசமைப்புச் சட்டமும், இனவிகிதாசாரத் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையும் தான் என்று கூறினார்.

ஜனாதிபதி குமாரதுங்க மல்வத்த நாயக்கரைச் சந்திப்பது கடந்த இரு ஆண்டுகளில் இதுவே முதல்முறை என்றும்-

கடந்த வியாழனன்று எதிர்க்கட்சிகள் கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது பொலீஸார் நடந்துகொண்டவிதத்தை மகாநாயக்கர் கண்டித்திருப்பதாகவும் - 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது. (ஐ)

ஓம் சாயி துணை

## 7 ஆம் ஆண்டின் துயரலைகள்

அன்னை மடி 05 - 01 - 1968



ஐங்கரன் பாதம் 10 - 08 - 1994

அமரர் தம்பிஐயா இரவிச்சந்திரன (ராசன்)

திதி:24.07.2001

ஆண்டுகள்ஏழு ஆனாலென்ன?
பிறவிகள்ஏழு எடுத்தாலென்ன?
நீண்டதூரம் பயணம் செய்த
எம் இனிய குலவிளக்கை
கண்ணாரக் காணும் வரை
ஆறாது எம்துயரம்.....!
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*"நவேந்திரகிரி"*
*இணுவில் மேற்கு, சுன்னாகம்.*

- குடும்பத்தினர்

(90323)

## நல்லூரில் இன்று கொடிச்சேலை பவனி

யாழ்ப்பாணம்,ஜுலை24

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் நாளை ஆரம்பமாக இருப்பதை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை காலை கொடிச்சேலை ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீமுருகன் ஆலயத்திலிருந்து இன்று காலை 8.30 மணிக்கு செங்குந்த மரபு மக்களால் கொடிச்சேலை சித்திரத்தேரில் மேளவாத்தியங்களுடன் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்படும். (ஐ)

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை24

கோப்பாய் மத்தி அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய பூங்காவனத் திருவிழாவான நாளை புதன்கிழமை மாலை சைவப் புலவர் எம்.எஸ்.ஸ்ரீதயாளனின் கதாப்பிரசங்கமும் கௌரவிப்பு நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளன.

'சொல்லின் செல்வர்' இரா.செல்வவடிவேல் தலைமையில் பட்டி மன்றமும், இசைநிகழ்ச்சியும் அன்று நடை பெறும். (ஐ)

# சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றியீட்டுவது மிகக் கடினம்

## அமைச்சர் திஸநாயக்கா தெரிவிப்பு

கொழும்பு,ஜுலை24

அடுத்த மாதம் நடைபெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பில் அரசு வெற்றிபெறுவது மிகக் கடினம்.

எதிர்க்கட்சிகளின் கூட்டுப் பிரசாரத்துக்கு மத்தியில் 50 சதவீத வாக்குகளைப் பெறுவது சுலபமாக இருக்கமாட்டாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும், மூத்த அமைச்சருமான எஸ்.பி.திஸநாயக்கா இவ்வாறு கூறியிருப்பதாக 'சண்டே லீடர்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதுபற்றி அமைச்சர் திஸநாயக்கா பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவிடம் அறிக்கை சமர்ப்பித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மட்டக்களப்பில் காடுகளை வெட்ட மக்களைப் பயன்படுத்தும் படையினர்

மட்டக்களப்பு,ஜுலை24

மட்டக்களப்பு நகருக்கு தெற்கே 12கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள புதுக்குடியிருப்பு கிராமத்தில் முகாமிட்டுள்ள விசேட அதிரடிப் படையினர் கிராம மக்களை அழைத்துச்சென்று காடு வெட்டுவதில் ஈடுபடுத்துவதுடன் முகாமைச் சுற்றி துப்புரவு செய்யுமாறும் பணிக்கின்றனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை அக்கிராமத்தைச் சேர்ந்த 25பேரை முகாமுக்கு வருமாறு அழைத்த விசேட அதிரடிப்படையினர் மண்முனை வாவியை அண்டிய காடுகளையும், கண்ணாப்பற்றைகளையும் வெட்டுவதில் ஈடுபடுத்தியுள்ளனர்.

சனிக்கிழமை கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று காலை 6மணிக்குக் கரைக்கு மீனவர்கள் திரும்பியபோது அவர்கள் பிடித்துவந்த மீன்களை எடுத்துவிட்டு காலை 9மணிக்கு அனைவரும் முகாமுக்கு வரவேண்டுமெனப் படையினர் உத்தரவிட்டுச் சென்றனர். சுமார் முப்பது மீனவர்கள் இவ்வாறு அழைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் காலை 9மணிக்கு முகாமுக்குச் சென்றபோது அனைவரையும் காடு வெட்டும் பணியில் மாலை 6மணி வரை ஈடுபடுத்தியுள்ளனர்.

இரவு முழுவதும் நித்திரை விழித்து மீன்பிடித்து வந்தபோது அந்த மீன்களையும் எடுத்துவிட்டு பகல் முழுவதும் காடுவெட்டுமாறு பணிக்கப்படுவதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை -

கடந்த வெள்ளிக்கிழமை சில பொதுமக்களை மண்முனை வாவியை அண்டிய பகுதியிலுள்ள காடுகளை வெட்டுவதற்காகப் படையினர் அழைத்துச் சென்றனர். காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் நிற்பதாக அறிந்ததும் அந்தப் பொதுமக்களை திரும்ப முகாமுக்குக் கொண்டுவந்து அவர்களை அடைத்து வைத்துவிட்டு மாலை 7மணிக்கே வீடுகளுக்குச் செல்ல அனுமதித்தனர்.

புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப்படையினர் அங்குள்ள மக்களை அடிமைகளைப் போலவே நடத்துகின்றனர். இது தொடர்பாக பல தடவைகள் மனித உரிமைகள் அமைப்புக்களுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் பலன் கிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-21)



தென்னிந்தியத் திருச்சபை யாழ்.ஆதீனத்தினால் கொக்குவில் மேற்கில் 100 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பேராயர் அதி வண.எஸ்.ஜெபநேசன் அடிகள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பெண் ஒருவருக்கு கண்ணாடியை வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ)

# பிரதமரும் அமைச்சரவையும் விலகுவதே இன்றைய நெருக்கடிகளுக்கு ஒரே தீர்வு!

## ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா கூறுகிறார்

கொழும்பு,ஜூலை24

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்துள்ள அரசின் பிரதமரான ரத்னசிறி விக்கிரமநாயக்கவும், அவரது அமைச்சரவையும் உடனடியாக ராஜினாமாச் செய்யவேண்டும்.

இதன்மூலமே நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ரெலோ அமைப்பின் முதல்வர் என். ஸ்ரீகாந்தா.

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைகுறித்து கொழும்புச் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

என்.ஸ்ரீகாந்தா மேலும் தெரிவித்திருப்பதாவது:-

1959 நவம்பரில் அன்றைய பிரதமர் டாக்டர் விஜயானந்த தகநாயக்கவும், 1964 டிசம்பரில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவை இழந்த நிலையில் தமது பிரதமர் பதவியிலிருந்து விலகினர்.

இருந்தும் இவர்களில் டட்லி சேனநாயக்கவும், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவும் தாம் பதவி துறந்த 5 வருடங்களின் பின்னர் மீண்டும் அதிகாரத்துக்கு வந்தனர். இதைப் போலவே டாக்டர் தகநாயக்கவும் பதவி துறந்து 5 வருடங்களின் பின்னர் மிக முக்கியமான மந்திரிப் பதவி ஒன்றுக்கு டட்லி சேனநாயக்க அரசாங்கத்தில் நியமிக்கப்பட்டார். இவையெல்லாம் வரலாற்று உண்மைகள்.

இன்றைய பிரதமரும் அவரின் தலைமையிலான அமைச்சரவையும் நாடாளுமன்றத்தில் தமது பெரும்பான்மையை இழந்திருப்பது தெட்டத் தெளிவாகிறது.

எனவேதான் தீவிர அரசியலில் 40 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டிருக்கும் பழுத்த அரசியல்வாதியும் முதன்முதலாக 1960 பங்குனி தேர்தலில் ஓர் சுயேட்சை சோஷலிஸ்ட் ஆக நாடாளுமன்றத்திற்குள் பிரவேசித்தவருமான இன்றைய பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க ஏற்கனவே குறிப்பிட்ட உயர்ந்த அரசியல் தலைவர்களான மூவரின் சிறப்பான முன்னுதாரணங்களைப் பின்பற்றி தனது பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும்.

எந்தவித சந்தேகத்திற்கப்பாலும் கௌரவமானதோர் கனவானாக மதிக்கப்படும் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தனதும் தன்னுடைய அமைச்சரவையினதும் ராஜினாமாக்களை சமர்ப்பிப்பதன் மூலம் முழுநாடும் எதிர்நோக்கி நிற்கும் அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு வழி வகுக்க முடியும்.

இன்றைய நெருக்கடியை அரசமைப்பு ரீதியாகவும், அமைதி வழியிலும் தீர்ப்பதற்கான திறவுகோலை பிரதமர் மாத்திரமே கொண்டிருக்கின்றார்.

இன்றைய அரசியல் சூழ்நிலையின் சவாலை சுயநலம் இன்றி எதிர்நோக்க பிரதமர் முன்வருவாரானால் இந்நாட்டின் வரலாற்றில் அதியுயர்ந்த ஜனநாயகவாதி என்ற கௌரவம் கட்டாயமாக அவருக்குக் கிடைக்கும் - என்றார். (ஐ-7)

# பயிற்சிக் கொடுப்பனவில் சேமிப்புத் திட்டம்

யாழ்.பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த அபிவிருத்தித் தொண்டர் தொழிற்பயிற்சி பெறும் இளைஞர், யுவதிகள் தமக்கு வழங்கப்பட்ட பயிற்சிக் கொடுப்பனவில் ஒரு தொகையினை வங்கியில் சேமிக்கும் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி திட்டமானது கைத்தொழில் அபிவிருத்தி சபையினரது அனுசரணையுடன் யாழ்.பிரதான வீதியில் உள்ள மக்கள் வங்கிக் கிளையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சேமிப்பை ஊக்குவிக்கவும் அதன மூலம் எதிர்காலத்தைத் திட்டமிடவும், சுயதொழிலை ஆரம்பிக்கத் தேவையான கடன்வசதிகளைப் பெறவும் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டு சேமிப்பு புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பயிற்சியாளர்களே இந்த சேமிப்புத் திட்டத்தை மாவட்ட ரீதியில முதன்முதலில் ஆரம்பித்து வைத்துள்ளனர். (க-17)

# மணற்காடு பகுதிக்குள் கடல்வெள்ளம் உட்புகாமல் தடுக்க 'தாங்கு' சுவர்!

## 5 லட்சம் ரூபா 'றான்' ஒதுக்கீடு

வடமராட்சி கிழக்கு,ஜூலை24

மணற்காட்டில் மாரி காலத்தில் கடல்வெள்ளம் குடியிருப்புப் பகுதிக்குள் உட்செல்லாமல் தடுப்பதற்காக 'தாங்கு' சுவர் அமைக்கப்படவுள்ளது.

இந்தத் தாங்கு சுவர் அமைப்பதற்காக பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஸ்ரீரங்கேஸ்வரனின் சிபாரிசின்படி 'றான்' 5 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

மாரி காலத்தில் மணற்காட்டுக் கிராமத்திற்குள் கடல் வெள்ளம் உட்புகுவதனால் கடற்கரையோரத்தில் வாழ்கின்ற மக்கள் அப்பகுதியை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படுவது வழமையாகும். (க-182)



# "காணிக்கை கண்ணீரே!"

நாடகப் பட்டறையில் புடம் போட்டு
நடிப்புலக நுணுக்கங்களில் நன்கு தேறி
நவரசங்கள் முகத்தில் நடம் புரியவைத்து
நம்மயிர்க்கால் சிலிர்க்கவைத்த கலையின் குன்றே!

கலைஞரது சாட்டைநிகர் வசனந் தன்னை
கவிச்சுவையாய் கனல்தெறிக்க முழக்கஞ் செய்து
பகுத்தறிவுப் பெட்டகமாய் பரிம ளித்த
பராசக்தி தந்த குண சேகரனே!

தாள லயம் தவறாத வசனம் உன்தன்
நாவுவழி நதியொழுக்காய் ஒலித்த போது
பாமரனை, படித்தவனைப் பேத மின்றி
பைத்தியமாய் ஆக்கிவைத்த மனோ கரனே!

நாதகர நரம்புகளுந்தன் வாய் நுழைத்து
பாதங்கள் தாளமிட சிரம் அசைத்து
சேதுராமன் குழலிசைக்கு உயிர் கொடுத்த
தில்லானா மோகனாம்பாள் சுஷண் முகனே!

செக்கிழுத்து நெஞ்சுருக வைத்துக் கண்ணீர்
சிந்தவைத்த சிதம்பரனே வெள்ளை யர்முன்
சீற்றமுடன் மண்பெருமை சாற்றி நின்று
சிந்தையெல்லாம் நிறைந்தவனே கட்டப் பொம்மா!

சிரிப்பதற்கும் அழுவதற்கும் நடிக ருண்டு
சிரிக்கவைக்கும் அழுவதற்கு யாவ ருண்டு
கலைக்குநிகர் எவருமில்லா திலகமே எம்
கண்ணீரைக் காணிக்கை ஆக்கி நின்றோம்!

வே.இளையகுட்டி
புத்தூர்.

# நடிகர் திலகமே! யாழ்மாதா நலிந்தாள்!

உனம் மகிழ திரைப்படத்தில் நடித்தாய்
உலகத்தை உந்தன்பக்கத்தில் இணைத்தாய்!
ஈழநாட்டுமண்ணில் எங்களுக்காய் உழைத்தாய்
இன்றெங்கே எமைப்பிரிந்து சென்றாய்?
தலைமகனாய் நடிப்புலகில் திகழ்ந்தாய்
தமிழ் கலையுலகை ஏனையா பிரிந்தாய்!
நிலைகுலைந்தாள் யாழ்மாது உனக்காய்
நீயென்றும் தமிழ் உலகில் வாழ்வாய்!

- மதுரகவி
காரை. எம்.பி.அருளானந்தன்.

# மண்டிகைக்குளம் விரைவில் புனரமைப்பு

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் சங்கானை மேற்கு மண்டிகைக் குளம் புனரமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக கடந்த வியாழனன்று தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் பெரும்பாக உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் திட்டமுகாமையாளர் பிறெட்றிக், உதவித் திட்ட முகாமையாளர் ஆர்.பகீரதன், பொறியிலாளர் ஆர். யோகரட்ணம், திட்ட உத்தியோகஸ்தர் கே.இராசேந்திரம், விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள், கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பட்டினிக் கெதிரான நிறுவன நிதியுதவியுடன் அப்பகுதி விவசாய சம்மேளனங்கள் இக்குளத்தைப் புனரமைக்கவுள்ளன. (க-27)

# நிதி ஒதுக்கீடு

சங்கானை,ஜூலை24

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் புதிய வகுப்பறைக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு ரூபா பத்து லட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளது. (க-7-29)

# மனித உரிமைக்குழு அதிகாரி காங்கேசன் செல்கிறார்

யாழ்ப்பாணம், ஜூலை24

காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமுக்கு நாளை புதன் கிழமை சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி என்.ஜீவேஸ்வரா உணவு மற்றும் கடிதங்களையும் அவர்களிடம் கையளிப்பார்.

உறவினர்கள் நாளை புதன் கிழமை காலை உணவு மற்றும் கடிதங்களைத் தம்மிடம் ஒப்படைக்கலாம் என்றும் அவர் அறிவித்துள்ளார். (க-10)

# வாசகர் திருமுகம்

## வேண்டாம் விளையாட்டு மண்ணெண்ணெய்-நெருப்புடன்!

மண்ணெண்ணெய் ஊற்றி தம்மைத்தாமே எரியூட்டி தற்கொலை செய்ய முயற்சிப்பவர்கள் தமது செயலால் மிகமிகப் பரிதாபகரமான மரணங்களைச் சந்திப்பது ஒரு புறமிருக்க, இன்னும் பலர் மண்ணெண்ணெய் - நெருப்புடன் விளையாடுகிறார்கள்!.

அதாவது ஏதோ ஒரு காரணத்துக்காக மற்றவர்களைப் பயப்படுத்துவதற்காகவோ அல்லது வெருட்டுவதற்காகவோ அல்லது அந்நேரத்துக் கோபத்தை, வெறுப்பை வெளிக்காட்டுவதற்காகவோ மண்ணெண்ணெய் - நெருப்பின் உதவியைப் பலர் இன்று நாடுகிறார்கள்!.

இறுதியில் மிக மோசமான உயிராபத்துக்களையும், மிகப் பரிதாபகரமான மரணங்களையும் இவர்கள் சந்திக்க நேரிடுகிறது. யாழ். போதனா வைத்தியசாலை எரிகாய நோயாளர்களிடமிருந்து கிடைக்கப் பெறும் சோகமான அனுபவங்கள் மூலம் இதன் பயங்கரம் வெளிப்படுத்தப்படுகிறது.

பாவம்.....

மண்ணெண்ணெய்க்கும் நெருப்புக்கும் தெரியாதே இவர்கள் வெருட்டுதற்காகத் தான் இப்படியான செயலில் ஈடுபடுகிறார்கள் என்று!.... இவர்கள் தமது கோபத்தை, வெறுப்பைக் காட்ட வேறு எத்தனையோ வழிகளைக் கையாளலாம். ஒரு போதும் விளையாட்டிற்கேனும் அல்லது முயற்சிப்பதாகக் கூட பாசாங்கு செய்ய இவ்வழியை நாடுவது எதிர்பாராத பாரிய விளைவுகளையே உருவாக்கும் - பலருக்கு உருவாக்கியிருக்கிறது.

இப்படியாகச் செய்து பலர் பல மாதங்களாக ஆறாத்துயரில் அவஸ்தைப்படுவதும், இன்றும் சிலர் மிக வேதனையாக மரணமடைவதும் பலருக்கும் பாடமாக அமையட்டும்.

செ.அன்புராசா
(ஆன்மகுரு)

யாழ்.ஆஸ்பத்திரி.

## சிந்து நடைக்கூத்து நடுவர் தீர்ப்பு தவறு என்று கூறுவது சரியா?

இம்முறை நடைபெற்ற யாழ்.மாவட்ட மட்ட தமிழ்மொழித் தினப் போட்டிகளில் சிந்துநடைக் கூத்து முதலிடம் பெற்றது தொடர்பாக 27.06.2001ஆம் திகதிய உதயனின் வாசகர் திருமுகம் பகுதியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தக் கூத்தானது தென்மோடிச் சாயலைக் கொண்டது என்றும், அதற்கு முதலிடம் கொடுத்தது தவறு என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறு விமர்சிக்கப்பட்ட கூத்தானது அண்மையில் திருமலையில் நடைபெற்ற மாகாண மட்டப் போட்டியிலும் முதலிடம் பெற்று யாழ்.மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது. அங்கும் நடுவர் தீர்ப்பு தவறு என்று கூற முடியுமா?

எமது பாரம்பரியக் கலைகள் தொடர்பான ஆழமான அறிவும், தேடலும் இல்லாத காரணத்தினாலேயே இவ்வாறான விமர்சனங்கள் எழுகின்றன. சிந்து நடைக்கூத்து என்பது உடுக்கடி கதையிலிருந்து தோன்றிய கதைவழிக் கூத்தாகும். இதற்கு சிந்து நடைப் பாடல்களே முதன்மையுடையவை. இதன் அளிக்கைப்பண்பு, அரங்க மொழி ஆடல் என்பவை தத்துவமானவை. 'காத்தவராயன்' கதை மட்டுமே இம்மரபில் பெருவழக்காக ஆடப்பட்டு வந்தது. ஆனால் புதிய கதைகளை இணைத்து ஆடும் மரபும் கணிசமாக இருந்து வந்துள்ளது. இம்முறை முதலாமிடம் பெற்ற கூத்து புதிய கதையை இணைத்துக்கொண்டமையே இது தொடர்பான விமர்சனத்துக்குக் காரணமாகும். தென்மோடிக் கூத்தானது இம்மரபில் இருந்து பெரிதும் வேறுபட்டதாகும். அதன் அளிக்கை முறை, ஆடல் பண்புகள், பாடல்கள் தனித்துவமானவை. இம்மரபின் தனித்துவங்களை அறியாதவர்கள் சிந்துநடையுடன் இணைத்துப் பார்த்தமை விசனத்துக்குரியதே.

ஆனால் முதலிடம் பெற்ற சிந்துநடைக் கூத்து தகுதியானதுதான் என்பதை மாவட்ட மட்டத் தீர்ப்பு மட்டுமன்றி, மாகாண மட்டத் தீர்ப்பும் நிரூபித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

*இளவாலை.* - வெற்றி பெற்ற பாடசாலையின் ஆசிரியர்.

## போலி உற்பத்தியின் மத்தியில் முன்மாதிரியான செயல்

சைவ சமய மரபிலே திருநீற்றுக்கு அதி உன்னதான இடமுண்டு. திருநீறு தெய்வத்தன்மை பொருந்தியதாக, சிவசின்னங்களிலே முதன்மையானதாகக் கொள்ளப்படுகின்றது. இது "மந்திரமாவது", "வானவர் மேலது", "சுந்தரமாவது", "துதிக்கப்படுவது" என்றெல்லாம் ஏற்றிப் போற்றப்படுகின்றது.

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்று கூறிய நம் ஆன்றோர்கள் "நீறில்லா நெற்றி பாழ்" என்று கூறியிருக்கின்றனர். திருநீற்றின் பழம் பெருமைக்கு இதுவும் ஒரு சான்று.

ஒரு சிவ சின்னமாய், வழிபாட்டோடு தொடர்புடைய ஒரு பொருளாய் மட்டுமன்றி நோய் தீர்க்கும் ஒப்பற்ற மருந்தாகவும் திருநீறு கொள்ளப்படுகின்றது. இத்துணை மகிமைமிக்க நமது திருநீறு இன்று மலினப்படுத்தப்பட்டு, ஓர் அற்ப வியாபாரப் பொருளாக்கப்பட்டுவிட்ட அவலத்தை என்னவென்பது.

இன்று கடைகளிலே 'திருநீறு' என்ற பெயரிலே ஏதேதோ பொருள்கள் எல்லாம் விற்பனையாகின்றன. எங்கெல்லாம் இருந்தோ சாம்பர் எடுக்கப்பட்டு, மணம் ஊட்டப்பட்டு, பொதி செய்யப்பட்டு திருநீறு என்ற பெயரில் விற்பனையாகின்றது. கடற்கரையில் பெறப்படுகின்ற ஒரு வகை மணலை இயந்திரத்தில் இட்டு மாவாய் அரைத்து அதனையும் திருநீறு என்ற பெயரில் விற்பனை செய்கிறார்களாம் சிலர்.

இத்தகைய போலித் திருநீற்றை நாம் நமது வீடுகளிலும் கோயில்களிலும் பயன்படுத்தத்தான் வேண்டுமா? அவ்வாறு பயன்படுத்துவதன் மூலம் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளத்தான் வேண்டுமா? ஒரு சிலரின் அற்ப வியாபார தந்திரத்துக்கு ஒப்பற்ற நமது சமயம் பலியாவது சரிதானா?

இவ்வினாக்களுக்கு இனிய விடையாக அமைகின்றது நாயன்மார்கட்டு வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தானத்தின் அண்மைக் காலத்து இந்த அரும்பணி. ஆம், முற்றிலும் இந்து சமய விதிகளுக்கு அமைவாக இவர்கள் விபூதியைத் தயாரித்து விநியோகித்து வருகின்றனர். இலாப நோக்கம் எதுவுமின்றி இவர்கள் ஆரம்பித்துள்ள அரும்பணி உண்மையிலேயே பாராட்டுதற்குரியது. சைவப் பெருமக்கள் அனைவருமே இந் நற்பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க முன்வர வேண்டும். இவ்வரும் பணியிலே ஈடுபட்டுள்ள அனைத்து உள்ளங்களுக்கும் வெயிலுகந்த விநாயகப் பெருமானின் திருபாகடாட்சம் கிட்டுவதாக.

*நல்லூர்* - ரவீந்திரன்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள **YAMAHA - 50**. சாளி மோட்டார் சைக்கிள்கள், **NATIONAL T.V.** (14"கலர்), பெணகள் லுமாலா துவிச்சக்கர வண்டி ஒன்று என்பன விற்பனைக்கு உண்டு. கிழமை நாளகளில் 4.00 மணிக்கு பின பார்வையிடலாம். தொடர்பு:-இல.28, வளாகவீதி, திருநெல்வேலி. (90337)

## மணமகன் தேவை

கத்தோலிக்க,கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அரச திணைக்களம் ஒன்றில் பணியாற்றும், 33வயது மணமகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். தொடர்பு:- வி.இல. 1336, மே/பா உதயன். (90357)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1970ஆம் ஆண்டில் பிறந்த, ஆசிரியருக்கு தகுந்த மணமகள் தேவை. தொடர்பு:- வி.இல.1338, மே/பா உதயன். (90361)

1972ஆம் ஆண்டு திருவாதிரை நட்சத்திரம், **STAFF ASST** - ஆக **BANK OF CEYLON** இல் உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்குப் பொருத்தமான மணப்பெண் தேவை. ஜாதகம், படத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்:- துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (90366)

## திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல் சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ்கன் என்பன ஒட்டியும் திருத்தியும் கொடுக்கப்படும். தொடர்பு:- சு.நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.(மேல்மாடி - கன்னாதிட்டிச் சந்திக்கருகில்) (90359)

## தவறிவிட்டது

திருமதி விக்ரோறியா இராசலிங்கம் என்பவரது தேசிய அ.அட்டை (இல.326574490V), கொழும்பு பொலீஸ் றிப்போட் என்பன அடங்கிய பேர்ஸ் 22-07-2001இல் யாழ்.கொஞ்சேஞ்சி மாதா கோயிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து **S**.தவஞானம், 21,சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.
**T.P. 021-3332.** (90356)

புத்தூர் மேற்கு, கலைமதி வீதி என்ற முகவரியைச் சேர்ந்த குணசேகரம சுதர்சன் என்பவருடைய விசேட அ.அட்டை 19-07-2001 அன்று நீர்வேலிக்கும் சிறுப்பிட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேலுள்ள விலாசத்தில் "ஸ்ரீ சியா" ஆட்டோ உரிமையாளரிடம் ஒப்படைக்கவும். (90363)

தச்சன் தோப்பு வீதி, கரவெட்டி மத்தி வே.புஸ்பநாதன் என்பவரின் கறுப்பு நிறப் பிரயாணப்பை முக்கிய ஆவணங்கள், பொருள்களுடன் கடந்த 17ஆம் திகதி அச்சுவேலிக்கும் (ராஜ வீதி பாதையில்) திருநெல்வேலிக்கும் இடையில் (நவக்கிரி பகுதியில்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சபாறதனி மோட்டோர்ஸ், பஸ் நிலையம், அச்சுவேலியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (90364)

பாலராசா விமலாதேவி என்பவருடைய விசேட அ.அ.(இல.091052059) தும்பளை(சாவகச்சேரி) பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்துக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், மேற்படி சங்கக் கிளையில் அல்லது குமாரசாமி கமலநாதன், யாலப்பை வீதி, மாதனை, பருத்தித்துறை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (90369)

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் துரைராசா (துரை)

திருநெல்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் துரைராசா (18.07.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2001) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, புதவுடல் தகனக கிரியைக்களுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்
V.T.ராஜேந்திரன் J.P.
(ராஜேந்திரா மாஸ்ரர்)

*காளிகோயிலடி,*
*திருநெல்வேலி மேற்கு,*
*யாழ்ப்பாணம்.* (90365)

## திருமதி இளங்கோவன் தனலட்சுமி

**(சோதி)**

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி இளங்கோவன் தனலட்சுமி 20-07-2001 வெள்ளிக்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் சுப்பிரமணியம் - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், செல்லத்துரை இளங்கோவனின் பாசமிகு மனைவியும், தயாநந்தன் (டோகா), பாமினி, ஜெயானந்தன்(காண்டீபன்), ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற(ஏழாலை) செல்லத்துரை - அன்னபூரணம தம்பதிகளின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(25-07-2001) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகள் வல்வை இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செ.இளங்கோவன் (ராசா)
கணவன்.

*பிள்ளையார் கோயிலடி,*
*இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.* (C/17535)

## வயிரமுத்து தம்புக்குட்டி

*(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய ஊழியர் - பளை)*

பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வயிரமுத்து தம்புக்குட்டி (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய ஊழியர்) அவர்கள் நேற்று (23-07-2001) திங்கட்கிழமை காலை சிவபதமெய்தி விட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான வயிரமுத்து - செல்லமுத்து தம்பதிகளின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற தையலம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வல்லிபுரம் - அன்னப்பிள்ளையின் மருமகனும், தருமராசா (ஓய்வூதியர், புகையிரதத் திணைக்களம்), தவமணி, தம்பித்துரை (அமெரிக்கா), தனபாலசிங்கம் (கனடா), திலகவதி (கனடா), ரேவதி (ஆசிரியர், பளை மத்திய கல்லூரி), தவராசா(கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவபவானி, சிவசந்திரன், லீலா, சறோ, சிவசுந்தரராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், அகீபன், சாமந்தி, தனுஷா, தேனுகா, சோபனா, சசிக்கா, கஜானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24-07-2001) செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு கோண்டாவிலில் உள்ள அவரது தற்காலிக இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
த.தருமராசா (மகன்).
தற்காலிக முகவரி:-
*டிப்போ முன்பாக,*
*கோகுல வீதி, கோண்டாவில்.*

நிரந்தர முகவரி:-
*கண்டி வீதி,*
*பளை.* (90372)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 22ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:

### சங்கானை

(178637ஏ) (182789ஏ) (183057ஏ)
(188730ஏ) (190672ஏ) (192381ஏ)
(192381பி) (192381சி) (193521ஏ)
(193578ஏ) (193579ஏ) (193579பி)
(194207ஏ) (194390ஏ) (194420ஏ)
(194420பி) (194420சி) (194439ஏ)
(194439பி) (194486ஏ) (194853ஏ)
(194853பி) (194853சி) (194918ஏ)
(194965ஏ) (194975ஏ) (194975பி)
(195010ஏ) (195044ஏ) (195052ஏ)
(195052பி) (195068ஏ) (195079ஏ)
(195093ஏ) (195106ஏ) (195144ஏ)
(195900ஏ) (195900பி) (195903ஏ)
(196908ஏ)

### சாவகச்சேரி

(195761ஏ)

### கோப்பாய்

(177426ஏ) (177426பி) (177426சி)
(180865ஏ) (186368ஏ) (195671ஏ)
(195671பி) (195671சி) (195672ஏ)
(199016ஏ) (199187ஏ) (200338ஏ)
(200338பி) (200338சி) (200338டி)
(200383ஏ) (200383பி) (200383சி)
(200383டி) (200395ஏ) (200395பி)
(200432ஏ) (200432பி) (200438ஏ)
(200443ஏ) (200443பி) (200443சி)
(201302ஏ) (201302பி) (201302சி)
(201384ஏ) (201384பி) (201440ஏ)
(201447ஏ) (203253ஏ) (203292ஏ)
(203292பி) (203292சி) (203300ஏ)
(203316ஏ) (203316பி) (203333ஏ)
(20333பி) (204510ஏ) (204510பி)
(204514ஏ) (204514பி)

### நல்லூர்

(1243076ஏ) (187691ஏ) (187709ஏ)
(187738ஏ) (188036ஏ) (199716ஏ)
(201219ஏ) (201223ஏ) (201223பி)
(201223சி) (201229ஏ) (201232ஏ)
(201232பி) (201232சி) (201236ஏ)
(201236பி) (201240ஏ) (201240பி)
(201241ஏ) (201241பி) (201241சி)
(201243ஏ) (201246ஏ) (201246பி)
(201246சி) (201246டி) (201248ஏ)
(201250ஏ) (201250பி) (201250சி)
(201257ஏ) (201268ஏ) (201268பி)
(201345ஏ) (201345பி) (201389ஏ)
(201389பி) (201389சி) (204586ஏ)
(188786ஏ) (191972ஏ) (191972பி)
(192402ஏ) (193585ஏ) (193782ஏ)
(193782பி) (194297ஏ) (194319ஏ)
(194361ஏ) (194952ஏ) (194989ஏ)
(194990ஏ) (194992ஏ) (195018ஏ)
(195114ஏ) (195844ஏ) (195844பி)
(195844சி) (195844டி) (195844ஈ)
(195845ஏ) (195857ஏ) (195870ஏ)
(195889ஏ) (197197ஏ)

### சண்டிலிப்பாய்

(190573ஏ) (191826ஏ) (191826பி)
(191826சி) (191863ஏ) (191879ஏ)
(191903ஏ) (191915ஏ) (191915பி)
(191944ஏ) (192347ஏ) (193520ஏ)
(193543ஏ) (193544ஏ) (193544பி)
(193551ஏ) (193551பி) (193721ஏ)
(194192ஏ) (194209ஏ) (194209பி)
(194209சி) (194253ஏ) (194282ஏ)
(194282பி) (194289ஏ) (194289பி)
(194296ஏ) (194314ஏ) (194314பி)
(194328ஏ) (194371ஏ) (194411ஏ)
(194411பி) (194411சி) (194411டி)
(194422ஏ) (194436ஏ) (194437ஏ)
(194438ஏ) (194856ஏ) (194886ஏ)
(194886பி) (194886சி) (194919ஏ)
(194931ஏ) (194953ஏ) (194998ஏ)
(194998பி) (195014ஏ) (195014பி)
(195019ஏ) (195026ஏ) (195028ஏ)
(195028பி) (195042ஏ) (195103ஏ)
(195103பி) (195103சி) (195137ஏ)
(195137பி) (195820ஏ) (195849ஏ)
(195855ஏ) (195855பி) (195867ஏ)
(195871ஏ) (195871பி) (195895ஏ)
(195925ஏ) (195942ஏ) (195942பி)
(195947ஏ) (195947பி) (195947சி)
(195960ஏ) (195960பி) (195971ஏ)
(195971பி) (195982ஏ) (195987ஏ)
(196031ஏ) (196532ஏ) (196969ஏ)
(197189ஏ) (197189பி) (197198ஏ)
(197198பி)

### தெல்லிப்பழை

(192379ஏ) (192468ஏ) (194262ஏ)
(194262பி) (194262சி) (194321ஏ)
(194443ஏ) (194855ஏ) (194855பி)
(194866ஏ) (194913ஏ) (194934ஏ)
(195021ஏ) (195021பி) (195021சி)
(195143ஏ) (195998ஏ) (196017ஏ)
(196075ஏ) (196075பி) (196075சி)
(196075டி) (197115ஏ) (197115பி)

### உடுவில்

(201367ஏ) (201393ஏ) (204509ஏ)
(204509பி) (204511ஏ) (204517ஏ)
(204517பி) (204522ஏ) (204522பி)
(204523ஏ) (204588ஏ) (204588பி)
(204599ஏ) (204599பி) (161930ஏ)
(161930பி) (161930சி) (174788ஏ)
(175934ஏ) (183237ஏ) (183237பி)
(184927ஏ) (185009ஏ) (187142ஏ)
(187142பி) (187143ஏ) (189344ஏ)
(190547ஏ) (191766ஏ) (191766பி)
(191818ஏ) (191818பி) (191820ஏ)
(191820பி) (191820சி) (191958ஏ)
(192042ஏ) (192042பி) (192192ஏ)
(192234ஏ) (192322ஏ) (192322பி)
(193495ஏ) (193523ஏ) (193523பி)
(193532ஏ) (193532பி) (193532சி)
(193533பி) (193535ஏ) (193595ஏ)
(193595பி) (193629ஏ) (193629பி)
(193655ஏ) (193655பி) (194191ஏ)
(194233ஏ) (194270ஏ) (194270பி)
(194356ஏ) (194414ஏ) (194417ஏ)
(194467ஏ) (194489ஏ) (194878ஏ)
(194878பி) (194898ஏ) (194898பி)
(194930ஏ) (194980ஏ) (194980பி)
(194980சி) (194987ஏ) (194987பி)
(194987சி) (195030ஏ) (195051ஏ)
(195051பி) (195077ஏ) (195102ஏ)
(195102பி) (195117ஏ) (195136ஏ)
(195142ஏ) (195813ஏ) (195813பி)
(195837ஏ) (195838ஏ) (195893ஏ)
(195905ஏ) (195995ஏ)

இம்மாதம் 23ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சங்கானை

(187510ஏ) (200548ஏ) (183101ஏ)
(183101பி) (183101சி) (188794ஏ)
(192288ஏ) (192288பி) (192288சி)
(192288டி) (192288ஈ) (192288எவ்)
(194266ஏ) (194267ஏ) (194911ஏ)
(194911பி) (195081ஏ) (195952ஏ)
(196028ஏ) (196042ஏ) (196903ஏ)
(196903பி) (196903சி) (196941ஏ)
(196951ஏ) (196952ஏ) (197007ஏ)
(197022ஏ) (197071ஏ) (197071பி)
(197071சி) (197071டி) (197071ஈ)
(197071எவ்) (197071ஜி) (197071எச்)
(197071ஐ) (197182ஏ) (198111ஏ)

### யாழ்ப்பாணம்

(187729ஏ)

### கோப்பாய்

(186671ஏ) (187107ஏ) (187107பி)
(187107சி) (190358ஏ) (190358பி)
(191276ஏ) (191351ஏ) (191351பி)
(191351சி) (191425ஏ) (191425பி)
(191604ஏ) (192859ஏ) (192859பி)
(192859சி) (192859டி) (192860ஏ)
(192860பி) (192860சி) (192860டி)
(192973ஏ) (192973பி) (195653ஏ)
(195664ஏ) (195759ஏ) (195759பி)
(195764ஏ) (195764பி) (196250ஏ)
(196250பி) (196388ஏ) (197710ஏ)
(197710பி) (197710சி) (197728ஏ)
(197749ஏ) (197749பி) (197763ஏ)
(197763பி) (197763சி) (197769ஏ)
(197776ஏ) (197776பி) (197782ஏ)
(197782பி) (197787ஏ) (197787பி)
(197818ஏ) (197818பி) (197818சி)
(197845ஏ) (197845பி) (197845சி)
(197845டி) (197845ஈ) (197849ஏ)
(197849பி) (198959ஏ) (198964ஏ)
(198964பி) (198964சி) (198976ஏ)
(198976பி) (198984ஏ) (198989ஏ)
(199212ஏ) (199215ஏ) (199215பி)
(199217ஏ) (199217பி) (199240ஏ)
(199240பி) (200324ஏ) (200325ஏ)
(200325பி) (200369ஏ) (200369பி)
(200376ஏ) (200401ஏ) (200401பி)
(200402ஏ) (200402பி) (200406ஏ)
(200424ஏ) (201157ஏ) (201157பி)
(201157சி) (201167ஏ) (201167பி)
(201171ஏ) (201427ஏ) (201427பி)
(201448ஏ) (201448பி)

### நல்லூர்

(171100ஏ) (184122ஏ) (184122பி)
(184122சி) (187705ஏ) (187726ஏ)
(187727ஏ) (187742ஏ) (187837ஏ)
(196141ஏ) (196166ஏ) (196183ஏ)
(196183பி) (196183சி) (196183டி)
(196183ஈ) (196183எவ்) (196184ஏ)
(196197ஏ) (196306ஏ) (196352ஏ)
(196400ஏ) (199636ஏ) (199751ஏ)
(199792ஏ) (200518ஏ) (201151ஏ)
(201163ஏ) (201203ஏ) (201205ஏ)
(201205பி) (201205சி) (201212ஏ)
(201212பி) (201303ஏ) (201414ஏ)
(201414பி) (201417ஏ) (201417பி)
(184904ஏ) (184905ஏ) (195061ஏ)
(195061பி) (195806ஏ) (196054ஏ)
(196054பி) (196077ஏ)

### சண்டிலிப்பாய்

(188050ஏ) (192252ஏ) (192258பி)
(192259ஏ) (192352ஏ) (193604ஏ)
(194410ஏ) (195148ஏ) (195839பி)
(195839பி) (195959ஏ) (196062ஏ)
(196066ஏ) (197027ஏ) (197083ஏ)
(197083பி) (197154ஏ) (198124ஏ)

### தெல்லிப்பழை

(201436ஏ) (201436பி) (201436சி)
(195047ஏ) (195113ஏ) (195113பி)
(195122ஏ) (195122பி) (195122சி)
(195122டி) (195848ஏ) (195902ஏ)
(195902பி)

### உடுவில்

(187926ஏ) (187926பி) (191347ஏ)
(191347பி) (191347சி) (191463ஏ)
(191463பி) (191463சி) (191463டி)
(196376ஏ) (196376பி) (196376சி)
(196376டி) (196393ஏ) (196398ஏ)
(201153ஏ) (201174ஏ) (201180ஏ)
(201180பி) (201189ஏ) (201306ஏ)
(201307ஏ) (201307பி) (201311ஏ)
(201326ஏ) (201418ஏ) (201418பி)
(201419ஏ) (201419பி) (201426ஏ)
(201426பி) (201426சி) (201426டி)
(201429ஏ) (190458ஏ) (191757ஏ)
(192212ஏ) (192223ஏ) (192223பி)
(192223சி) (193514ஏ) (193514பி)
(193514சி) (193514டி) (193514ஈ)
(194421ஏ) (194885ஏ) (194885பி)
(194936ஏ) (195008ஏ) (195041ஏ)
(195078ஏ) (195085ஏ) (195810ஏ)
(195975ஏ) (197123ஏ) (197123பி)


## தூரிகை நுண்கலை வளாகம்

**பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள்**

(1) உடையமைத்தல் (2) கேக் ஐசிங்
(3) முடியலங்காரமும் முக ஒப்பனையும்
(4) FABRIC PAINTING (துணி வர்ணமிடல்)
(5) பூ வேலை, கம்பளி நூல் வேலை, கைப்பணி.
(6) சிற்றுண்டி, உணவு தயாரித்தல்
(7) சித்திரம் (8) புகைப்படப் பிடிப்புக்கலை

* 28-07-2001 இலிருந்து பயிற்சிகள் ஆரம்பம்.
* விரும்பும் எந்தப் பயிற்சியிலும் கலந்துகொள்ள எமது நிறுவனங்களில் விண்ணப்பிக்கலாம்.

*செங்குந்தா வீதி, கல்வியங்காடு.* ↔ *ம.ம.வி.வீதி, நெல்லியடி.* (90367)


# கண்ணீர் அஞ்சலி

## அமரர் வல்லிபுரம் துரைராஜா

18.07.2001 அன்று காலமான வல்லிபுரம் துரைராஜா அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

'கலாபூஷணம்' 'ஸ்தபதி'
ஆ.ஜீவரட்ணம் ஆச்சாரியார்
குடும்பத்தினர்.

*ஆறுமுகம் சிற்பாலயம்,*
*திருநெல்வேலி.* (90382)

## சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக
# விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் கிராம மட்டத்தில் நடத்தப்படும்

கிராம மட்டத்திலான சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு ஊடாக ஒவ்வொரு கிராம மட்டத்திலும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்துவதற்கு கிராம அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கைகள் பிரதேச செயலர் பிரிவுகளில் கடமையாற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். செல்வரட்ணம் தெரிவித்தார்.

ஒவ்வொரு கிராமங்களிலும் நடத்தப்படவுள்ள இந்தக் கருத்தரங்குகள், 5 மணி நேரம் கொண்டதாக அமைந்திருக்கும்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் 10 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு, அந்தக் கிராம மக்கள் பயன்பெறக் கூடிய விதத்தில் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்தித் திணைக்களம் மேற்படி கருத்தரங்குகளை நடத்துவதற்கு ஒவ்வொரு கருத்தரங்குக்கும் ஆயிரத்து 200 ரூபா வீதம் ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தக் கருத்தரங்குகளை எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்குள் நடத்தி முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இந்த முயற்சிக்கு அனைத்து கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் முன்னுரிமை கொடுத்து செயற்பட்டு வருவதாகவும், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

## அதிபர்கள் கூட்டம்

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற உள்ளதாக கோட்டக் கல்வி அதிகாரி அறிவித்துள்ளார். (ஐ-72)


பரீட்சை ஆவணங்களை
பரீட்சை இணைப்பு நிலையங்களுக்கு
விநியோகிப்பதற்கும் எடுத்துவருவதற்கும்
மோட்டார் வாகனங்களை

### வாடகைக்கு அமர்த்துவதற்கான
## கூறுவிலை கோரல்

2001-08-04ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க. பொ. த. (உ/த) பரீட்சை ஆவணங்களை மாவட்ட சேகரிப்பு நிலையத்தில் இருந்து இணைப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும், திரும்பவும் சேகரிப்பு நிலையத்திற்கு எடுத்து வருவதற்கும் மோட்டா வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கு கூறு விலைகள் கோரப்படுகின்றன.

இது சம்பந்தமான மேலதிக விவரங்களையும், கூறு விலைக்கான படிவங்களையும் யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இக் கூறு விலைகள் 2001-07-30 ஆம் திகதி மு. ப. 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

திருமதி செ. மகாலிங்கம்
வலயக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

வலயக் கல்விப் பணிமனை,
யாழ்ப்பாணம்.
(சி/17537)


## மெய்வன்மைப் போட்டி

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே. குகேந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் கே. மணிபல்லவராஜனும் வலி.கிழக்குப் பிரதேசசபைத் தலைவர் பி. குணசிங்கமும் கலந்து கொள்வர். (ம)

## மாமனை வெட்டிய மருமகன்!

நீண்டகாலமாக இடம்பெற்றுவந்த சீதனத் தகராறு கத்திவெட்டில் முடிந்தது

கடந்த இரு தினங்களுக்கு முன் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மருமகனின் வெட்டுக்கு இலக்காகி மாமன் படுகாயமடைந்தார்.

சீதனம் கேட்டு அடிக்கடி தகராறு செய்து வந்த மருமகனின் உபத்திரவம் தாங்க முடியாது மாமன் பொலீஸில் முறைப்பாடு செய்திருந்தார் என்றும் —

அதைத் தொடர்ந்து ஆத்திரமுற்ற மருமகன் மாமனை அடித்தும் கத்தியால் வெட்டியும் காயப்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அல்வாய் வடக்கு, விராவோடையில் கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 67 வயதுடைய மாமனார் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (க-ј 5)


## சோதிடம்

கம்பியூட்டர் மூலம் ஜாதகங்கள் துல்லியமாகக் கணித்தும், எழுதியும் கொடுக்கப்படும்,

எண்சோதிடம், திருமணப்பொருத்தம் என்பனவும் பார்க்கப்படும்.

உரிமையாளர்
நாகலிங்கம்
கந்தையா
சதுர்வீகா ஜோதிட நிலையம்
சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.
(90386)


## ஆதீனகர்த்தாவுக்கு பாராட்டு விழா

வைதிகதர்மகர்த்தா சங்கங்கள் இணைந்து இளவாலை சித்திரமேழி அம்பலவாண ஞானவைரவர் தேவஸ்தானத்தின் ஆதரவுடன் கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான ஆதீனகர்த்தா கு. நகுலேஸ்வரக்குருக்களுக்கு எடுக்கும் பாராட்டு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு சித்திரமேழி அம்பலவாண ஞானவைரவர் தேவஸ்தானத்தில் இடம்பெறவிருக்கின்றது.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ணஐயர் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் மேழியூர் சைவப்புலவர் சி. திருநாவுக்கரசு எழுதிய 'இறையியல் தத்துவமும் வழிபடும் முறைகளும் (பகுதி II) பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்' என்னும் நூல் வெளியிட்டு வைக்கப்படும். (ஐ-3)


### யாழ்ப்பாணம்
### தேசிய கல்வியியற் கல்லூரி
## இல்ல மெய்வல்லுநர் போட்டி

தலைவர்:-
கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
அவர்கள் (பீடாதிபதி)

இடம்:-
யா/ கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

காலம்:-
இன்று (24-07-2001) செவ்வாய்
பிற்பகல் 2.00 மணி.

பிரதம விருந்தினர்:-
திரு. K.V. குகேந்திரன் அவர்கள்
(நாடாளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்)

சிறப்பு விருந்தினர்:-
திரு. K. மணிபல்லவராஜன் அவர்கள்
(தலைவர், நல்லூர் பிரதேச சபை)
திரு. P. குணசிங்கம் அவர்கள்
(தலைவர், கோப்பாய் பிரதேச சபை)

கௌரவ விருந்தினர்:-
திரு. M. பரஞ்சோதி அவர்கள்
(அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினர்.
(சி/17538)


# மரண அறிவித்தல்கள்

## செல்வி இராமலிங்கசர்மா வித்யாரதி
(ரதி)

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், தற்போது வவுனியாவில் வசித்து வந்தவருமான செல்வி இராமலிங்கசர்மா வித்யாரதி (ரதி) அவர்கள் நேற்று முன்தினம் (22 – 07 – 2001) ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் காலமானார்

அன்னார் இராமலிங்கசர்மா — விக்னேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற ரமணசர்மா மற்றும் ரமணிதரசர்மா, வனஜா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23-7-2001) திங்கட்கிழமை வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
செ. நடராஜசர்மா
(மாமா)

பழனிஆண்டவர் கோயிலடி,
கோண்டாவில் மேற்கு.
(90385)

## திருமதி இராசதுரை சோதிப்பிள்ளை

கிளாலை - கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசதுரை சோதிப்பிள்ளை நேற்று (23 – 07 – 2001) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கன்னிக்குட்டி – கொத்தியாரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சின்னாச்சிப் பிள்ளையின் அன்பு மருமகளும் இராசதுரையின் அன்பு மனைவியும் ரத்ணலிங்கம், விஜயலட்சுமி, சண்முகலிங்கம், செல்வலட்சுமி, சற்குணலிங்கம் (நோர்வே), பவளலட்சுமி (மல்லாவி) ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்தி, செல்வராசா, தேவராசா, கமலட்சுமி, இராமநாதன் (சவுதி) ஆகியோரின் அன்பு மாமியாரும் வற்சலன், நிர்மலன், சியாமளா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (24-07-2001) இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி மேற்கு தம்பாலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. இராசதுரை
(கணவன்)

மலைவேம்படி,
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.
(90388)

# நெஞ்சகலாத நினைவஞ்சலி

18 ஆம் ஆண்டு | 5 ஆம் ஆண்டு





அமரர்
எஸ். சரவணமுத்து
B. A. (லண்டன்)
(இளைப்பாறிய ஆசிரியர்)
பிறப்பு:- 19-04-1901
இறப்பு:- 24-07-1983

அமரர்
சு. கலாபரமேஸ்வரன்
(M. A.)
(முன்னாள் திட்டமிடல் அதிகாரி)
02-08-1944
24-07-1983

அமரர்
தி. சுப்பிரமணியம்
இளைப்பாறிய விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர், புத்தூர்)
23-03-1906
06-05-1996

தங்களை நினைவு கூரும்,
குடும்பத்தினர்.

"இலட்சுமிபதி",
326, பலாலி றோட்,
திருநெல்வேலி.

சுன்னாகம் றோட்,
புத்தூர்.

(90381)

# நால்வர் கொண்ட திருடர் கோஷ்டி யாழ்.பொலீஸ் வலையில் சிக்கியது!

## திருடப்பட்ட பொருள்கள் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஜூலை24

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் திருட்டுச் செயல்களில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் திருடர் கோஷ்டி ஒன்றைக் கைது செய்துள்ள யாழ்.பொலீஸ் நிலைய குற்றச் செயல் தடுப்புப் பிரிவினர் அவர்களால் திருடப்பட்ட பல பொருள்களையும் மீட்டுள்ளனர்.

யாழ்.பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரிகளின் பணிப்பின் பேரில் குற்றத் தடுப்புப் பொலீஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினரே நான்கு பேர் கொண்ட திருட்டுக் கோஷ்டியை கைது செய்து அவர்களால் திருடப்பட்ட பல பொருள்களையும் மீட்டுள்ளனர்.

திருடர்களிடம் இருந்து மீட்கப்பட்டு அடையாளம் காண்பதற்காக யாழ்.பொலீஸ் நிலையத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள பொருள்களின் விவரம் வருமாறு:-

நீரிறைக்கும் இயந்திரம் -4, ஜெனரேற்றர் - 2, மேசை விசிறி - 1, சங்கிலி - 1, காப்பு - 1, மோதிரம் - 2, சொனி ரீ.வி. - 1, வீடியோடெக் - 1, லுமாலா சைக்கிள்கள் - 7.

அடையாளம் காணப்படாதுள்ள சைக்கிள்களின் இலக்கமும் இனமும் வருமாறு:-

★ லுமாலா பெண்கள் சைக்கிள்-12531733.

★ லுமாலா பெண்கள் சைக்கிள்-55994514.

★ லுமாலா ஆண்கள் சைக்கிள்-55583592.

★ லுமாலா ஆண்கள் சைக்கிள் - 55912441.

★ லுமாலா ஆண்கள் சைக்கிள் - ஏ - 1260149.

இந்தத் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையதாகத் தெரிவித்து, மொட்டையன், ரவி, சிறி, தவராசா, ஆகிய நான்கு சந்தேக நபர்களையும் பொலீஸார் கைதுசெய்து யாழ்.நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர்.

இவர்கள் நான்கு பேரையும் எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்.நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை -

இந்தத் திருடர் குழுவுடன் இணைந்து செயற்பட்டதாகக் கூறப்படும் சின்னவன், நிஹூால்டன்சன், ரதன், பாஸ்கரன், ரஜனி ஆகியோரையும் பொலீஸார் தேடிவருவதாகவும் -

இவர்கள் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் யாழ்.பொலீஸ் நிலையத்துடன் 021 - 2222 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல் தருமாறு குற்றச் செயல் தடுப்புப் பொலீஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

(ஐ-6)

# காணாமற்போனோர் பற்றிய விசாரணைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை24

காணாமறபோனோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் காணாமற்போன மேலும் 14 பேர் தொடர்பான விசாரணைகளுக்கு சாட்சிகளை அழைத்துள்ளனர்.

காணாமறபோனவர்களின் பெயர் விவரம், கோவை இலக்கம், சாட்சிகளின் விவரம் முறையே வருமாறு:-

★ இரத்தினம் தேவராஜா (கோவை இல. - பி.ஜ - 438) கைதடி, நுணாவில் - இரத்தினம் தர்மகோகிலம் (தாயின் இறப்பு சான்றிதழை எடுத்துவரவும்)

★ இராசையா சுதர்மன் (கோவை இல. பி. - 9/186) இல.167, விபுலாநந்த வீதி, அரியாலை, சந்திரன் சித்திரா.

★ அந்தோனிப்பிள்ளை பிறான்சிஸ் (கோவை இல. பி - 9/145) இல. 29/ஏ, கொண்டலடி, குருநகர். அந்தோனிப்பிள்ளை றொபேட் சதீஸ் குமார்.

★ சடையன் பொன்னம்பலம் (கோவை இல. பி.ஜ. - 211) கொலனி தோப்பு, அச்சுவேலி. பார்வதி சடையன்.

காணாமறபோனமை தொடர்பாக தங்களிடம் உள்ள ஆவணங்களை எடுத்துவரவும்.

★ குஞ்சன் அருந்தவராஜா (கோவை இல. பி.ஜ. - 412) மலர்மகள் வீதி, கைதடி மத்தி. காணாமற் போனமை தொடர்பாக முறைப்பாடு செய்தவர்கள்.

★ காசிப்பிள்ளை கதிரநாதன் (கோவை இல. பி.ஜ. - 188) இல. 488/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். புண்ணியமூர்த்தி காசிப்பிள்ளை.

★ கந்தசாமி ஜீவராஜன் (கோவை இல. பி.ஜ. - 9/3) சண்முகம் வீதி, சாவகச்சேரி. மார்க்கண்டு தேவி.

★ சின்னத்துரை செல்வநாதன் (கோவை இல. பி.ஜ. - 9/142) சரசாலை வடக்கு, சாவகச்சேரி. சின்னையா, கதிர்காமநாதன் சின்னத்துரை.

★ எஸ்.இலங்கைநாயகம் (கோவை இல. பி.ஜ. - 242) மறவன் புலோ மத்தி, சாவகச்சேரி. பி.பொனனுசாமி.

★ சரஸ்வதி சௌந்தரராஜன் (கோவை இல. பி.ஜ. - 1/6) ஆவரங்கால், மட்டுவில் வடக்கு, குட்டியன் தேவராஜ்.

★ அப்புத்துரை சிறீகரன் (கோவை இல. பி.ஜ. - 118) மட்டுவில் வடக்கு சந்திரபுரம், சீதா பாக்கியராஜா, சிறீகரன் பத்மினி.

★ ஜேசுதாசன் அமன்றிலோ (கோவை இல. பி.ஜ. - 404) குருநகர், காணாமறபோனவரின் உறவினர்கள்.

★ கந்தசாமி செந்தீபன் (கோவை இல. பி.ஜ. - 9/114) சண்முகநாதன் வீதி, தும்புத் தொழிற்சாலை, கரவெட்டி தெற்கு. கிருஷ்ணலதா.

★ வீரசிங்கம் விஜயகுமார் (கோவை இல. பி. - 425) கண்டி வீதி, கொடிகாமம். சின்னவன் கந்தசாமி.(ஐ-6)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த

ரட்ணசங்கர் - நிர்மலா தம்பதிகளின்

செல்வப் புதல்வன்

### செல்வன் சஞ்ஜீவன்

தனது முதலாவது பிறந்த நாளை நேற்று (23-07-2001) திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா (இராசரத்தினப் பத்தர் அன் சன்ஸ் உரிமையாளர்), அம்மா, அப்பப்பா, அம்மப்பா (சாந்தலிங்கப் பத்தர் அன் சன்ஸ் உரிமையாளர்), அம்மம்மா, பெரியமாமா (தர்மி வீடியோ உரிமையாளர்), சின்னமாமா (மகேந்திரா ஜுவலர்ஸ் உரிமையாளர்), நடுமாமா (ஆசிரியர்), குட்டிமாமா (சன் ஜுவலர்ஸ் உரிமையாளர்), சித்தப்பா (ஆசிரியர்), அத்தைமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் வல்லிபுர ஆழ்வார் அருள் பெற்று ஆரோக்கியத்தோடும் தீர்க்காயுளோடும் சிறப்புற்று நீடூழி வாழ மனமார வாழ்த்துகிறார்கள்.

இராசரத்தினப் பத்தர் அன் சன்ஸ்,
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

- இ.ரட்ணசங்கர்.
(அப்பா)
(90375)



## OLD BOYS' ASSOCIATION OF ST.PATRICK'S COLLEGE JAFFNA

### A.G.M. - 2001

எதிர்வரும் (29.07.2001) ஞாயிறு காலை 9.30 மணிக்கு வருடாந்தப் பொதுக்கூட்டம் திருப்பலியுடன் ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றேன்.

சங்கத்தில் புதிதாக இணைய விரும்பும் பழைய மாணவர்கள் 29.07.2001ஆம் திகதிக்கு முன் தொடர்புகொள்ளவும்.

59, புனித பத்திரிசிரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

- பொதுச் செயலாளர்.
(90378)


### உயர்தர வகுப்பு மாணவருக்கு ஊக்குவிப்பு நிதி

பருத்தித்துறை,ஜூலை24

யாழ்மாவட்டத்தில் இடம்பெயர்ந்து முகாம்களில் நலன்புரி நிலையங்களில் வாழும் ஜி.ச.ஈ உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதியை வடக்கு புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வழங்கவுள்ளது.

இம் மாணவர்களுக்கு தலா 500 ரூபா வீதம் ஊக்குவிப்பு நிதி வழங்கப்படும்.

இம் மாணவர் தொடர்பான விவரங்களை குடாநாட்டில் உள்ள ஐந்து வலயக் கல்வி அலுவலகங்களும் திரட்டி வருகின்றன.

(க-118)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை24

ஜி.சீ.ஈ உயர்தரப் புள்ளிகளின் அடிப்படையில் ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி இதுவரை நியமனம் கிடைக்காதவர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)


சுந்தர் வெளியீடு நடத்தும் புலமைப் பரிசில் பரீட்சை (2) முடிவுகள்

MATHS CENTRE
Nelliady

- சி.கௌதமி - 166 (நெ. மெ. மி. பாடசாலை)
- ச.விதூரன் - 154 (திக்கம் சித்தி விநாயகர்)
- ப.நிஷானி - 153 (நெ. மெ. மி. பாடசாலை)
- ப.ஜெசிதா - 151 (சாவ. இ. ஆரம்ப பாடசாலை)
- வ.பத்மஸ்ரீ - 149 (நெ. மெ. மி. பாடசாலை)
- சி.பவிதா - 149 (நெ. மெ. மி. பாடசாலை)
- ச.யஸ்வினி - 147 (நெ. மெ. மி. பாடசாலை)
- சி.மெக்சி பாரதிதா - 147 (துன்னாலை காசிநாதர்)

அடுத்த பரீட்சை:
29-07-2001 ஞாயிறு 3.30 p.m.
பெயர்களைப் பதிவு செய்யுமாறு வேண்டுகின்றோம்.
(90368) - நிர்வாகி.




மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள தையல் பயிற்சி நிலையத்திற்கு 'கியூடெக்' நிறுவனத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட தையல் இயந்திரங்களை வழங்கும் வைபவத்தில் 'கியூடெக்' நிறுவனத்தின் சார்பில் அருட்தந்தை இருதயதாஸ், தையல் பயிற்சி நிலைய ஆசிரியை மற்றும் பயிற்சி பெறுகின்ற யுவதிகளிடம் தையல் இயந்திரத்தை வழங்குகின்றார். அருகில் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.சிறீரங்கேஸ்வரன், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளை ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(ஐ-182) (படம்:-வடமராட்சி கிழக்கு செய்தியாளர்)

# கைதடி இளம் குடும்பஸ்தரை கொழும்பில் காணவில்லை

## மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை24

கைதடிப் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொழும்பில் காணாமற்போய்விட்டதாக அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு மனைவியுடன் கொழும்பு சென்று அங்கு பம்பலப்பிட்டியில் லொட்ஜ் ஒன்றில் தங்கியிருந்த இவர் பின்பு மனைவியை வவுனியாவுக்குக் கூட்டிச்சென்று விட்டுத் திரும்பவும் கொழும்பு சென்று லொட்ஜில் தங்கியிருந்த வேளையிலேயே காணாமற் போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதடியைச் சேர்ந்த தம்பிராசா ரஜனி (வயது 23) இவ்வாறு காணாமற் போனவராவர்.

இந்த முறைப்பாடு தொடர்பாக கொழும்பில் உள்ள எம்.ஜி.லொட்ஜ் உரிமையாளருடன் தான் தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டதாகவும் -

அதற்கு அவர் குறிப்பிட்ட நபரை பொலீஸாரோ, படையினரோ கைது செய்ததாகத் தெரியவில்லை எனவும் ஆனால் இப்பொழுது லொட்ஜில் குறிப்பிட்ட நபர் தங்கியிருக்கவில்லை என்று தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் ஆணைக் குழுவின் அதிகாரி என்.ஜீவேஸ்வரா தெரிவித்துள்ளார்.

(ஐ-10)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### சுன்னாகம் ஐயனார் தேவஸ்தானம்



மேற்படி ஆலய மண்டப வேலைகளுக்காக ரூபா எட்டு இலட்சம் நிதியை ஒதுக்கி அதில் ரூபா நான்கு லட்சத்தை உடன் வழங்கிய

மாண்புமிகு கௌரவ அமைச்சர்

K.N.டக்ளஸ் தேவானந்தா

அவர்களையும்,



வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர்

திரு.K.கமலசேகரன்

அவர்களையும்

நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- பரிபாலனசபை,
சுன்னாகம். (90373) சுன்னாகம் ஐயனார் தேவஸ்தானம்.


## மரண அறிவித்தல்

### திருமதி மயில்வாகனம் அன்னமுத்து

நுணாவில் கிழக்கு, தாழையம்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் புதுவளவு, ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் அன்னமுத்து நேற்று (23.07.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் (மது பரிசோதகர்) அன்பு மனைவியும் சாந்தமலர், கமலேஸ்வரன் (வவுனியா), இராசேந்திரன் (மக்கள் வங்கி ஊழியர், யாழ்.பல்கலைக்கழகம்), நேசமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் குமாரசாமி, கருணாவதி, கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற கலைவாணி மற்றும் றஞ்சி, புனிதராணி, திருமுருகன் (நோர்வே), பரஞ்சோதி, கேதீசன், இரட்சினி, ஜெகன், ஜெனகன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2001) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

புதுவளவு,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம். (90384)

தகவல்:
ம.இராசேந்திரன்
(மகன்-மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகக் கிளை)

# மானிப்பாய்
# வலி.தென் மேற்கு பிரதேசத்துக்கான நிதி ஒதுக்கீடு
# - 2001 -



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்
வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரம், இந்துசமய கலாசார
அமைச்சரும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான
மாண்புமிகு அமைச்சர் கௌரவ

## கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள்



ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும்,
நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ

## கே.வி.குகேந்திரன் (ஜெகன்)

ஊடாகக் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி நிதியினை
ஒதுக்கீடு செய்துள்ளார்.



வலி.தென் மேற்குப் பிரதேச சபைத் தலைவரும்,
ஈ.பி.டி.பியின் மானிப்பாய்த் தொகுதி அமைப்பாளருமான

## திரு.வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்

ஜே.பி.யு.எம்.

### வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் நிதி ஒதுக்கீடு - 2001
## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு

| இல. | ஸ்தாபனம் | அமைவிடம் | வேலைத் திட்டம் | செயற்பாட்டு முகவர் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|
| 1. | வெள்ளவாய்கால் அமைத்தல் | சாவற்கட்டு, ஆனைக்கோட்டை | வெள்ளவாய்க்கால் அமைத்தல் | பிரதேச சபை | 700,000.00 |
| 2. | அந்தோனியார் ஆலயம் | மானிப்பாய் | புனரமைப்பு முன் பக்கக் கட்டடம் | வ.பு.பு.அ.ச/பி.சபை | 500,000.00 |
| 3. | சென்.ஹென்றிஸ் கல்லூரி | இளவாலை | கட்டடம் புனரமைத்தல் | வ.பு.பு.அ.ச/பா.அ.சபை | 700,000.00 |
| 4. | புளியங்கண்டுப் பிள்ளையார் கோயில் | ஆனைக்கோட்டை | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 300,000.00 |
| 5. | முருகமூர்த்தி கோயில் | சாவற்கட்டு | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 300,000.00 |
| 6. | ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் கோயில் | நவாலி | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 300,000.00 |
| 7. | கரப்பிரான் பிள்ளையார் கோயில் | ஆனைக்கோட்டை | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 200,000.00 |
| 8. | அரசினர் த.க.பாடசாலை | சண்டிலிப்பாய் வடக்கு | கட்டடம் புனரமைத்தல் | வ.பு.பு.அ.ச/பா.அ.சபை | 300,000.00 |
| 9. | பொதுச் சந்தை | சாவற்கட்டு | மீள் புனரமைப்பு | பிரதேச சபை | 400,000.00 |
| 10. | சென். தோமஸ் ஆலயம் | மாதகல் | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 400,000.00 |
| 11. | பேய்ச்சி அம்மன் கோயில் | மாதகல் | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 200,000.00 |
| 12. | இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு | பண்டத்தரிப்பு | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பா.அ.சபை | 800,000.00 |
| 13. | சம்பில்துறை-தேவஸ்தானம் மற்றும் மயானம் | மாதகல் | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 500,000.00 |
| 14. | வடலியடைப்பு பாரத்தனை ஐயனார் ஆலயம் | பண்டத்தரிப்பு | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 187,500.00 |
| | மொத்தம் | | | | 5,787,500.00 |

★ சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மேற்குறிப்பிடப்படாத ஏனைய ஆலயங்கள், சனசமூக நிலையங்களுக்கும் விரைவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

★ மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான நிதியினை ஒதுக்கீடு செய்தமைக்காக வலி.தென் மேற்கு, மானிப்பாய் பிரதேச மக்களும், நானும் கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*"நாம் என்றும் மக்களுக்காக!"*

திரு. வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் ஜே.பி.யு.எம்.

(வலி.தென் மேற்குப் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் மானிப்பாய்த் தொகுதி அமைப்பாளரும்)

(C/17536)

சர்வஜன வாக்கெடுப்புத் தொடர்பாக

# தவறாக செய்தி வெளியிடும் ஊடகங்கள் மீது நடவடிக்கை

## தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை24

சர்வஜன வாக்கெடுப்புத் தொடர்பாக அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளைத் திரித்து அல்லது தவறாக வெளியிடும் ஊடகங்கள் மீது வழக்குத் தொடரப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக தெரிவித்துள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்புத் தொடர்பாக நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சில ஊடகங்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தி, சர்வஜன வாக்கெடுப்பை சீர்குலைக்கும் சதிமுயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் -

அவ்வாறான ஊடகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி கோரியுள்ளதாகவும் -

அந்த அறிக்கையில் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேசமயம், அரசுக்கு பாதகமான செய்திகளை வெளியிடும் ஊடகங்கள் மீது அரச தரப்பு கடும்போக்கைக் கடைப்பிடிக்க முயற்சிப்பதாக எதிர்க்கட்சிகள் கூறிவருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிரான

# துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்த ஜே.வி.பி. ஆதரவாளர் மீது தாக்கு!

கொழும்பு,ஜூலை24

சர்வஜன வாக்கெடுப்பைப் பகிஷ்கரிக்கும்படி கோரும் துண்டுப் பிரசுரங்களை நிவித்திகலவில் நேற்று முன்தினம் விநியோகித்துக் கொண்டிருந்த ஜே.வி.பி. அமைப்பின் ஆதரவாளர்கள் மூவர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு உள்ளான மூவரும் இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினரே மேற்கொண்டனர் என்று ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது. (ஓ-3)

# அடுத்த போராட்டம் பற்றி நேற்று ரணில் அறிவிப்பு

கொழும்பு,ஜூலை24

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் எதிர்வரும் சனிக்கிழமை போராட்டம் ஒன்றை நடத்தவிருப்பதாக ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை எதிர்க்கட்சிகள் நடத்திய போராட்டத்தின்போது பொலீஸார் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கை காரணமாக, அடுத்த போராட்டம் இடம்பெறும் இடம் குறித்து முன்கூட்டி அறிவிக்கப் போவதில்லை என்றும் -

திடீரென ஓரிடத்தில் அந்தப் போராட்டம் இடம்பெறும் என்றும் -கூறிய எதிர்க்கட்சித் தலைவர் அரசுக்கு எதிரான போராட்டங்கள் தொடர்ந்து இடம்பெறும் என்றும் கூறினார். (ஓ-3)

# அசம்பாவிதம் எதுவுமின்றி இடம்பெற்ற ஜே.வி.பியின் எழுச்சிக் கூட்டங்கள்

கொழும்பு,ஜூலை24

ஜனாதிபதியால் ஒத்திவைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறும் -

சர்வஜன வாக்கெடுப்பைக் கைவிடுமாறும் -

வலியுறுத்தி ஜே.வி.பியினர் கொழும்பு நகருக்கு வெளியே 22 இடங்களில் நேற்று நடத்திய எழுச்சிக் கூட்டங்கள் அசம்பாவிதங்கள் எதுவுமின்றி நடந்து முடிந்தன.

கொழும்பின் புறநகர்ப்பகுதிகளான மகரகம, கிரிபத்கொட, கடுவெல உட்பட 22 இடங்களில் ஜே.வி.பியின் எழுச்சிக்கூட்டங்கள் இடம்பெற்றபோதும் கொழும்பு மாநகர எல்லைக்குள் ஜே.வி.பியின் கூட்டம் எதுவும் ஏற்பாடு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

# பிரதமர் பாதுகாப்புப் பொலீஸார் கொள்ளை தொடர்பாகக் கைது!

கொழும்பு,ஜூலை24

மிரட்டிப் பணம்பறித்த சம்பவம் ஒன்று தொடர்பாக பிரதமர் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த மூன்று பொலீஸார் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சமீபத்தில் காலி முகத்திடல் பகுதியில் வர்த்தகர் ஒருவரைத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டிக் கடத்திச் சென்று அவரிடமிருந்து 15 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையடித்தது தொடர்பாக சம்பந்தப்பட்ட வர்த்தகர் பொலீஸில் முறையிட்டதாகவும்-

அதனையடுத்தே பிரஸ்தாப பொலீஸார் மூவரும் கைது செய்யப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

---

### பகிஷ்கரிப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் அவரது விடுதலை தொடர்பாகவும் பிணை அனுமதி தொடர்பாகவும் சட்டமா அதிபரிடம் இருந்து பதில் வரவேண்டி இருப்பதனால் எமது பகிஷ்கரிப்புப் போராட்டத்தினை தற்காலிகமாக இடைநிறுத்தி விரிவுரைகளுக்கு சமுகமளிக்கத் தீர்மானித்துள்ளோம்- என்றுள்ளது. (உ-3-6)

## கலந்துரையாடல்

பச்சிலைப்பள்ளி மக்களின் குறைகேள் நிவர்த்தி கலந்துரையாடல் நாளை மறுதினம் காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பிரதேச வர்த்தகர்களின் இழப்பீடு, சீவல் தொழிலாளர்களின் ஊக்குவிப்புக் கொடுப்பனவு, ஆலயங்களின் பாதிப்பு தொடர்பாக ஆலய நிர்வாகிகளின் மற்றும் பூசகர்களின் செயற்பாடுகள், குறைந்த ஊதியம் பெறும் ஊதியர்களுக்கு நிவாரணம் வழங்குவது, ஏனைய பாதிப்புக்கு உள்ளானவர்களின் தேவைகள் ஆகியவை பற்றி அமைச்சருடன் கலநதுரையாட இருப்பதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பச்சிலைப்பள்ளி பிரதேச இடம் பெயர்ந்தோர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (ஐ-117)

## துண்டுப்பிரசுரம் விநியோகம்

திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோயிலடியில் கடந்த மாதம் 22 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் ஒன்றில களப்பலியான விடுதலைப் புலிகளின் உறுப்பினரான மேஜர் சுதன், கப்டன் மித்திரன் ஆகியோரின் 31ஆம் நாளை நினைவு கூர்ந்து துண்டுப் பிரசுரங்கள் திருநெல்வேலிப் பகுதியில் நேற்று விநியோகம் செய்யப்பட்டன. அத்துடன் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன. (உ-3)

## தெய்வேந்திரன் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.தெய்வேந்திரன் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி(பயிற்சி)யாக உடன் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான கடிதத்தை வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு நேற்று அனுப்பியுள்ளது (3)

## திவ்வியனை மேயர் ரவிராஜ் சந்தித்தார்

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவன் கி.திவ்வியனை யாழ். மாநகர மேயர் என்.ரவிராஜ் நேற்றுச் சந்தித்தார்.

நீண்டநேரம் அவருடன் கலந்துரையாடிய ரவிராஜ் அவரது நலன்கள் குறித்து கேட்டறிந்தார்.

அதேசமயம் -

திவ்வியன் இன்று யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவிருக்கின்றார்.

இவரைப் பிணையில் விடுவது தொடர்பான உத்தரவை யாழ்.நீதிமன்றம் இன்று விடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (3)

## மணலாறு மோதலில் இரு சிப்பாய்கள் காயம்

கொழும்பு,ஜூலை24

மணலாறு பகுதியில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதலில் இரு சிப்பாய்கள் காயமடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 5.15 மணியளவில் பராக்கிரமபுரவில் நடந்த இந்த மோதலின் போது இரண்டு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டதாகவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று வெளியிட்ட கள நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## பொறி வெடியில் சிக்கி சிப்பாய் மரணம்

கொழும்பு,ஜூலை24

கிளாலிப் பகுதியில் நேற்று முன்தினம் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் பொறி வெடியொன்றில் சிக்கியதில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; மேலும் இரு படையினர் காயமடைந்த நிலையில் பலாலி இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

*(முன்னர் வந்த செய்தி 7ஆம் பக்கத்தில்)*

# புதிய அரசு ஓகஸ்டில் அமையும் எதிர்க்கட்சித் தலைவர் ஆரூடம்

கொழும்பு,ஜூலை24

நாட்டில் ஜனநாயகத்தைக் காப்பதில் ஆர்வம் கொண்டுள்ள அரசியல் கட்சிகளின் ஆதரவிலான புதிய அரசு ஓகஸ்ட் மாதத்தில் அமைக்கப்படும்.

நேற்றுக் காலை கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் ரணில் அங்கு தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசு கவிழ்க்கப்பட்டு, பின்னர் எதிர்க்கட்சிகள் அமைக்கும் அரசு, நாட்டில் ஜனநாயகத்தை சகல மட்டங்களிலும் செயற்படுத்துவதை பிரதானமான கடமையாகக் கொள்ளும்

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் எவ்வகையான இடையூறுகள் வந்தாலும் அதற்கு எதிராக ஐ.தே.கட்சி போராடும்.

ஜனாதிபதியின் ஏகாதிபத்திய போக்கை முறியடிக்க ஜனநாயகத்தை மதிக்கும் அனைவரும் ஓரணியில் இணையவேண்டும்.

அரசமைப்புக்கு முரணாக, சட்டரீதியற்ற முறையில் செயற்படும் அரசு ஒன்றுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருக்கும் பொலீஸாருக்கு எதிரணியினரைத் தாக்குவதற்கு எந்தவித அதிகாரமும் இல்லை - என்றார்.

இடதுசாரித் தலைவரான வாசுதேவ நாணயக்கார கூறுகையில்,

தனது அரசியல் சுயலாபத்துக்காகவே ஜனாதிபதி நாடாளுமன்றத்தை ஒத்திவைத்ததாகவும் -

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றி அரசைக் கவிழ்ப்பதில் எதிர்க்கட்சிகள் வெற்றி பெற்றுவிடும் என்று தெரிந்ததாலேயே இதனை ஜனாதிபதி மேற்கொண்டதாகவும் -

தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் பிரமுகர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர். (ஓ-3)

## மாணவருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை24

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று தற்பொழுது இடம் பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கல்வி கற்றுவருகின்ற இந்த ஆண்டு ஜி.சீ.ஈ(சாதாரணதர) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை உடனடியாகத் தற்பொழுது பாடசாலை இயங்குகின்ற இணுவில் மத்திய கல்லூரியில் அல்லது நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (க-10)

* * *

இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்திலிருந்து இடம் பெயர்ந்து வேறுபாடசாலைகளில் கல்விகற்கும் தரம் 11 ஐச் சேர்ந்த மாணவர்கள் ஜி.சீ.ஈ(சாதாரணதர) தேர்வுக்கு விண்ணப்பிக்க நிரந்தரமாக இயங்கும் வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்திறகு 26 ஆம் திகதிக்கு முன்னர் வந்து விவரங்களைப் பதிந்து கொள்ளுமாறு விதத்தியாலய அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (க)

* * *

கச்சாய் அ.த.க. பாடசாலையிலிருந்து ஜி.சீஈ(சாதாரணதர) பரீட்சைக்கு முதலாம் தடவையும், இரண்டாம் தடவையும் தோற்றவுள்ள மாணவர்கள் தமது விவரங்களை கொற்றாவத்தை "ஸ்ரடி சேக்கிள்" கல்வி நிலையத்திலோ அல்லது புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியிலோ எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன் பதிவு செய்துகொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (க)

---

### நிபந்தனைகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராகவும் ஜனநாயக ரீதியில் குரல் கொடுத்து வந்துள்ளோம். இந்நிலையில் எமது ஜனநாயக ரீதியிலான - வன்முறைகளற்ற செயற்பாடுகளைத் திரிபுபடுத்தி, வன்முறைப் போராட்டங்களாக உங்களுக்கு வேண்டுமென்றே கூறப்பட்டிருக்கலாம் என நாம் கருதுகின்றோம்.

ஆதலினால் இவ்வாறான - உண்மைக்குப் புறம்பான - செய்திகளை நம்பித் தாங்கள் விதித்திருக்கும் நிபந்தனைகளை இதயசுத்தியுடன் - ஜனநாயக ரீதியாகச் செயற்பட்டு வரும் எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. இவ்விடயத்தில் எமது நாட்டில் உள்ள ஏனைய பல்கலைக்கழக மாணவர்களுக்கு இருக்கும் ஜனநாயக உரிமைகள் எமக்கும் கிடைக்கத் தாங்கள் செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

---

### மாணவர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமையவில்லை.

மாணவர் ஒன்றியத்தினால் எழுதப்பட்ட பதில் கடிதத்தில் நியாயப்படுத்த முடியாததும் ஜனநாயக உரிமைகளை மறுதலிப்பதாகவும் கூறப்பட்டிருக்கும் விடயங்கள் முற்றிலும் ஏற்கப்படமுடியாதவை.

இருந்தபோதும் பெரும்பாலான பல்கலைக்கழக மாணவர்களினதும் பல்கலைக்கழகச் சமூகத்தினதும் ஒட்டுமொத்தமான நலன்கருதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் எவ்வித தடங்கலும் இன்றித் தொடர்வதற்கு வழிசெய்யும்படி உயர் கல்வி அமைச்சர் இந்திக குணவர்த்தனவுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிபாரிசு செய்துள்ளார்.

மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தத்தம் கல்விச் செயற்பாடுகளில் தீவிர அக்கறை காட்டவும் சமூகத்தின் ஒட்டுமொத்த நலன்களுக்கு உகந்த வகையில் செயற்படவும் முன்வர வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டுள்ளார்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)


intel Pentium 4
• Intel Pentium 4 - 1.4 GHz
• Intel Net burst Micro Architecture
• Intel Desktop board D850GB
• 400 Mhz System data bus
• 128 MB PC 600 RDRAM
• 40 GB Hard disk
• 8 MB AGP VGA Card
• 1.44 FDD
• 14" Digital Color Monitor
• ATX Mid Tower Casing
• PS/2 Key Board & Mouse with Pad
Multimedia
• 52X CD-ROM
• 32BIT PCI Sound Card
• Speakers
• 56.6 Kbps Internal Fax Modem
Price Rs 110,000

intel Pentium III 1000MHz
• Intel Pentium III - 1GHz Gigabyte Main Board
• 64 MB RAM
• 20.4 GB Hard disk
• 8 MB AGP VGA Card
• 1.44 FDD
• 14" Digital Color Monitor
• ATX Mid Tower Casing
• PS/2 Key Board & Mouse with Pad
Multimedia
• 52X CD-ROM
• 32BIT PCI Sound Card
• Speakers
• 56.6 Kbps Internal Fax Modem
Price Rs 85,000

intel Pentium III 866MHz
மேற்குறிப்பிட்ட Configuration உடன் 866 MHz Processor
intel Pentium III 733MHz
மேற்குறிப்பிட்ட Configuration உடன் 733 MHz Processor
Cyrix 333MHz
மேற்குறிப்பிட்ட Configuration உடன் 333 MHz Processor
Upgrade
20 GB -- 40 GB - 2500/-
64 MB Ram -- 128 MB Ram - 1250/-
14" Monitor -- 15" Monitor - 3500/-

மற்றும்....
Dot Matrix
* EPSON LQ 300+ 24 pins
Ink jet
* Canon colour printer
Laser Jet
* HP 1200
அத்துடன்......
Scanner A4 BED
600 VA UPS
* Auto voltage regulator
* Lightning protection
* 40 mins Back up Current

CD SALES
அனைத்து Software CD's
தமிழ் MP3 CD's
CD to CD Copy
with Blank C.D

PC DOCTOR READY
உங்கள் Computer ல் ஏதும் பிழைகள் இருப்பின் எங்களை அழையுங்கள்.
Mobile Service :- 021-2067
10.00 a.m - 5.00p.m

Internet & E-mail Connection

MICRO PC SYSTEMS
No.9, Modern Market, Hospital Road, Jaffna. Tele:021-2067
Head Office :- No 15,38th Lane, Wellawatte, Colombo 06 Tele:-074-513235 074-516784 Web: www.mipaq.com
Branch :- No 82, New Chetty Street, Kotahena, Colombo-13. Tel 074 - 619673



வெளிவந்து விட்டது!
தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை
2001 ஆம் ஆண்டு எதிர்பார்ப்பு
வினாக்கள் விடைகளுடன்
✹ 1825 - பயிற்சி வினாக்கள் - விடைகளுடன்
✹ 7 ஆண்டுகளுக்கான கடந்தகால வினா விடைகள்
ஆசிரியர்: P.அம்பிகைபாகன்
பக்கங்கள் - 428 விலை - 195/= (C/17530)
பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல. 4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.